Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 வைகாசி- 17 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற-ஆகிர் 22 (31.05.2005) செவ்வாய்க்கிழமை இதழ்:244

சிறியதோ, பெரியதோ, எந்த அளவுகளிலான பொதிகள், கடிதங்களை எந்த நாட்டிற்கும் எந்தநேரமும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் அனுப்பிட

FedEx Express

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Ceylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

# பாதுகாப்பு வலயங்களை விலக்கியே பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும்!

## படையதிகாரிகளிடம் சந்திரிகா உறுதியளிப்பு

கொழும்பு —

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள பாதுகாப்பு வலயங்களை விலக்கியே - பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் என்றும் பொதுக்கட்டமைப்பில் பாதுகாப்பு விடயங்கள் எதுவும் உள்ளடக்கப்படமாட்டாது என்றும் -

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாதுகாப்பு உயர்மட்ட அதிகாரிகளுக்கு உறுதியளித்திருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு உருவாக்குவது தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், முப்படைகளினதும் தளபதிகள், கூட்டுப்படைத் தளபதி ஆகியோருடன் ஜனாதிபதி சந்திரிகா இரகசியப் பேச்சுக்களை நடத்தியிருந்ததாகவும் - இதன்போதே அவர் இந்த உறுதி மொழியை வழங்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதால் வடக்கு - கிழக்கில் உள்ள படையினரின் முகாம்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் -

காங்கேசன்துறை மற்றும் திருகோணமலை துறை முகங்களுக்கும் பொதுக்கட்டமைப்பினூடாக எந்தவித பாதிப்பும் ஏற்படுத்தமுடியாத வகையிலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி சந்திரிகா இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியின் எதிர்ப்பை மீறி பொதுக்கட்டமைப்பு இல்லை!

### விவசாய அமைச்சர் நம்பிக்கை

கொழும்பு —

புலிகளுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதை ஜே.வி.பி. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இதனால் பொதுக்கட்டமைப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைச்சாத்திடாது.

அதனையும் மீறி பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுமானால் கூட்டணியிலிருந்து வெளியேறிவிடுவோம் என ஜே.வி.பி. மீண்டும் எச்சரித்துள்ளது.

வாரியப்பொலவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே விவசாய அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

நாட்டில் இரண்டு பொதுக்கட்டமைப்புக்கள் உள்ளன. ஜே.வி.பிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலானது ஒன்று. மற்றது சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்ப புலிகளுடன் இணைந்து உருவாக்க உத்தேசிதுள்ள பொதுக் கட்டமைப்பு. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மகாவம்சத்தை அடிப்படையாக வைத்து இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது!

### நிதி அமைச்சர் சரத் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு —

மேடைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் யுத்தத்தைப் பற்றியும் சமூகங்களுக்கிடையே இனமுறுகலை ஏற்படுத்தும் வகையிலும் கூச்சல்போடும் அரசியல்வாதிகள் எவரும் அனுராதபுரத்திற்கப்பால் செல்லத் தைரியம் இல்லாதவர்களென நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

கண்டி - கலகெதரவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது -

யுத்தத்தைப் பற்றியும் சமூகங்களுக்கிடையே இனமுறுகலை ஏற்படுத்தும் வகையிலும் கூச்சல்போடும் அரசியல்வாதிகளில் பலர் திருகோணமலைக்குச் செல்லக்கூட தயக்கம் காட்டிவருகின்றனர்.

மேடைகளில் வீரமுழக்கமிடும் இந்த அரசியல்வாதிகள் - மக்களின் சுபீட்ச வாழ்விற்கோ அல்லது மக்களின் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை.

ஆகவே, எதிர்வரும் காலங்களில் தமது பிரதேசங்களில் உள்ள முட்டாள்களை மக்கள் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்திற்கு அனுப்புவதில்லையென திடசங்கற்பம் பூணவேண்டும்.

பதிலாக - மக்களுக்கு உண்மையான சேவை செய்து, இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தக் கூடியவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென நான் வலியுறுத்தி வேண்டிக் கொள்கிறேன்

நாட்டில் கொழுந்துவிட்டெரியும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மகாவம்சத்தை நாம் அடிப்படையாகக் கொள்ளமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

## பாடசாலை மாணவியை அதிபர் பாலியல் துஷ்பிரயோகம்!

### பொதுமக்கள் திரண்டு முற்றுகை

பருத்தித்துறை —

பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் பாடசாலை மாணவி ஒருவரை அதிபர் தகாத நடவடிக்கைக்குப் பயன்படுத்த முயற்சித்ததாகக் கூறப்படும் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதி மக்கள் பாடசாலையை முற்றுகையிட்டனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கலாசாரம் பேணும் குழுவினர் - மக்களை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்ததுடன் அதிபரை விசாரணைக்குட்படுத்தினர்.

கற்கோவளத்தில் இருபாலரும் கல்விகற்கும் பாடசாலையில் தரம் 7 இல் கல்வி கற்கும் 12 வயது மாணவியை அதிபர் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்த முயற்சித்ததாகவும் இதனால் அச்சமடைந்த மாணவி பாடசாலைக்குச் செல்வதற்கு மறுத்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

நேற்று பெற்றோரின் பயமுறுத்தலை அடுத்து பாடசாலைக்குச் சென்ற மேற்படி மாணவியுடன் அதிபர் தகாத நடத்தையில் ஈடுபட முயற்சித்ததாகக் கூறப்படுகிறது. இதனையடுத்து மாணவி வீட்டுக்குத் தப்பியோடிவந்துவிட்டார்.

இதன்பின்னர் தாயாருக்கு சம்பவம் தொடர்பாகக் கூறியதை அடுத்து மாணவியின் பெற்றோருடன் அந்தப் பகுதி மக்களும் திரண்டு பாடசாலை அதிபரைத் தாக்குவதற்காகச் சென்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை துப்பாக்கிச்சூட்டில் சுனந்தவின் சாரதி உயிரிழப்பு!

அம்பாறை —

சுதந்திர ஊடக இயக்கத்தின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரியவின் சாரதியான முகமட் பௌசன் (வயது23) அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை - வீரமுனைச் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார்.

குருநாகலைச் சேர்ந்த மொகமட் பௌசன் அவருடைய நண்பரான மொகமட் பவாஸ் (வயது 23) என்பவருடன் அட்டாளைச்சேனைக்குச் சென்று கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -



சுனந்த தேசப்பிரியவின் சாரதி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஹெல உறுமயவும் போட்டி!

### எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு —

கட்சி அரசியலினால் - அரசியல் தலைவர்கள் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் முடிவுகளை எடுத்துவருவதாகவும்- இதனால் நாட்டைக் காப்பாற்றுவதற்காக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதாகவும் ஜாதிஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவில் கம்பஹா மாவட்டப் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றும்போதே கட்சியின் இந்த முடிவுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் அறிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும்போது -

இந்தநாட்டு அரசியல் தலைவர்கள் - கட்சி அரசியலினால் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வகையில் எடுக்கும் முடிவுகளால் நாடு, மதம், சுற்றுச்சூழல் என்பன பெரும் சீரழிவுகளுக்குள்ளாகி நாடு அதலபாதாளத்தை நோக்கிச் செல்கிறது.

ஜனாதிபதி போன்ற பதவிகளின் பின்னால் ஒளிந்து கொண்டிருப்பவர்கள் மக்களின் உரிமைகளைக் காட் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கு யார் ஆதரவு வழங்கினாலும் ஜே.வி.பி. அனுமதிக்காதாம்!

கொழும்பு —

பொதுக்கட்டமைப்புக்கு யார் ஆதரவு வழங்கினாலும் தாம் ஒருபோதும் ஆதரவு வழங்கமாட்டோம் என ஜே.வி.பி மீண்டும் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி அரசியல்பீடம் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் சுனாமியின் பின்னர் அமைக்கப்படவுள்ள பொதுக் கட்டமைப்பைக் கொண்டு விடுதலைப் புலிகள் தமது வளங்களை பெருப்பித்துக் கொள்ளப்போகின்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தர்சிலையை அகற்றக்கோரி இன்று நீதிமன்றத்தில்வழக்கு!

திருகோணமலை —

திருகோணமலை நகரில் நகரசபைக்குச் சொந்தமான நிலப்பரப்பில் சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர்சிலையை அகற்றக்கோரி நகரசபையின் விசேட ஆணையாளர் சுந்தரம் அருமைநாயகம் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளார்.

நகரசபைக்குச் சொந்தமான ஓட்டோ தரிப்பிடத்தில் நகரசபையின் அனுமதிபெறாது - சட்டவிரோதமாக ஓட்டோ சங்கச் செயலாளர் கீர்த்தி பிறேமலால் அமைத்துள்ளார் என்றும், இதனை அகற்றுவதற்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்படவுள்ளது.

இதேவேளை சட்டமா அதிபரின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொச்சி விமானநிலையத்துக்குள் புலிகள் ஊடுருவ முயற்சியாம்!

### பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது


கொச்சி —

கேரளாவிலுள்ள கொச்சி சர்வதேச விமான நிலையத்துக்குள் ஊடுருவி புலிகள் விமானத்தைக் கடத்திச் செல்லத் திட்டமிட்டிருப்பதாக இந்தியப் புல னாய்வுத்துறைக்கு இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக எச்சரிக்கப்பட்டதை அடுத்து அங்கு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து விமானநிலையத்துக்குள் பார்வையாளர்கள் நுழையவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மத்திய தொழில் பாதுகாப்புப் படையினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர் அமைப்பு நடத்திய பரிசளிப்பு விழா





யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட தமிழீழ மாணவர் அமைப்பினால் மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய, மற்றும் கடந்த வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ். நல்லூர் கோட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் பரா புவனேந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக அரங்கவாயிலில் தமிழீழ தேசிய கொடியை தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் ஏற்றி வைத்தார். பொதுச் சுடரை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். மோகனதாஸ், சர்வதேச மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கண்ணன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் கிருஷ்ணா மற்றும் யாழ். மாவட்ட கல்வி மேம்பாட்டு பேரவைத் தலைவரும், முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளருமாகிய செல்வி பெரியதம்பி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் மற்றும் வெள்ளிக் கேடயங்கள் என்பன வழங்கப்பட்டன. இவற்றை யாழ். மாவட்ட துணை அரசியற் பொறுப்பாளர் கண்ணன், துணை வேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், பெரியதம்பி ஆகியோர் வழங்கினர்.

# தமிழீழ மாணவர் எழுச்சி நாள் ஜூன் 2 ஆம் திகதிக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்

அடுத்த மாதம் ஆறாம் திகதி க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளதனால் தமிழீழ மாணவர் அமைப்பினரால் வருடாந்தம் எழுச்சியாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஜூன் ஆறாம் திகதியிலிருந்து ஜூன் 2 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தமிழீழ மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து மாணவர் அமைப்பினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாணவர்களின் எதிர்காலம் வளமாக அமையவேண்டும் என்ற உயர் நோக்கோடு தமிழ் மாணவர் பேரவையை அமைத்து தன்னை அர்ப்பணித்து தமிழீழ விடுதலைக்கான பயணத்தில் முதல் மாவீரனான பொன். சிவகுமாரன் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆரம்ப கால மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளராகப் பணியாற்றி வீரச் சாவைத் தழுவிக்கொண்ட மேஜர் முரளி ஆகிய இரு மாவீரர்களையும் நினைவு கூர்ந்து ஜூன் 6 ஆம் நாளை மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனம் செய்து தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் மாணவர்களினால் எழுச்சியாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களின் பரீட்சை ஜூன் 6ஆம் திகதி நடைபெறவிருப்பதனால் எழுச்சி நாள் நிகழ்வுகள் ஜூன் 2 ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இந்த நிகழ்வில் மாவட்ட தேசிய மட்டத்தில் சாதனை புரிந்த மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தலும், எழுச்சி ஊர்வலமும் ஏனைய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

எனவே மாணவர் எழுச்சி நாளை எழுச்சியுடன் கொண்டாட அனைத்து மாணவர்களையும், ஆசிரியர்களையும், கல்வி சார் பெரியவர்களையும், மக்களையும் ஜூன்2ஆம் திகதி மாவட்டம் தோறும் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடாநாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் நிரப்பத் தடை!

## செயலக கூட்டத்தில் தீர்மானம்

யாழ். மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் நிரப்புவதற்கு தடை செய்வது என யாழ். செயலக சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் அண்மைக் காலமாக வாகனங்களினால் அளவுக்கு அதிகமான புகைகள் வெளியேறுவதனால் சூழல் மாசடையும் அபாயம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இதற்கமைய மேற்படி வாகனங்களில் அளவுக்கு அதிகமாக வெளியேறும் புகைகளைக் கட்டுப்படுத்துவதற்கே மேற்படி நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

சில வாகனங்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தமது வாகனத்திற்கு நிரப்பும் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களுடன் மண்ணெண்ணெயைக் கலந்து வாகனம் ஓட்டுவதனாலேயே அதிக புகை எழுகிறது எனவும், ஒரு தரப்பினரால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டமைக்கு அமையவே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மிக விரைவில் யாழ். செயலகத்தில் வாகன சாரதிகளுக்கு கருத்தரங்கு ஒன்று நடைபெற இருப்பதுடன் அதன் பின்பு மேற்படி நடைமுறை இறுக்கமாக மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊழியர் சேமலாப நிதி மீளப் பெறல்

ஊழியர் சேமலாப நிதியை மீளப்பெறுவதற்கு விண்ணப்பித்து ஆறு மாத காலத்திற்கு மேற்பட்டும் இது வரை நிதி கிடைக்கப் பெறாதவர்களை ஜூன் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள மாவட்டத் தொழில் அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

# முறுக்கு உண்ட இரு மாணவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்

ஸ்பிறிற் கலந்த முறுக்கை உண்ட மாணவர்கள் இருவர் மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில்இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சென். சாள்ஸ் மகாவித்தியாலய மாணவர்கள் ரவிச்சந்திரன் யூலியன் (வயது 13), விஜயகுமார் சுஜீவன் (வயது15) ஆகிய இருவருமே மயக்கமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

பாடசாலை பாடம் தொடர்பான ஒப்படை தேவைக்கு மருந்துப் பொருளான ஸ்பிறிற் பாடசாலைப் பைக்குள் வைத்துக்கொண்டு வந்த மாணவன் அந்தப் பையினுள் பாடசாலை இடைவேளை நேரம் உண்பதற்காக முறுக்கு பண்டத்தினை பைக்குள் கொண்டுவந்திருந்தான்.

இதன்போது ஸ்பிறிற் போத்தல் உடைந்து உணவுடன் கலந்துள்ளது. அதனைப் பொருட்படுத்தாது சகமாணவனுடன் முறுக்கை உட்கொண்டதால் இருவரும் மயக்கமடைந்தனர்.

இவர்கள் இருவரும் ஆசிரியரின் உதவியுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று மாலை இவர்களின் உடல் நிலை வழமைக்குத் திரும்பியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம்

சென்னை ஸ்ரீராமகிருஷ்ண மடத்து ராமகிருஷ்ண விவேகானந்த நூல்களின் கண்காட்சியும், விற்பனையும் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை அதிபர் கமலா பொன்னம்பலத்திடம் உலகில் மிகவும் சிறப்பு மிக்கக் கோவை ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலய வெளியீடான திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.


## சிறு விளம்பரம்

**ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்**

**Pandit Nara Semanaidu**
**World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நாயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள்கொண்டு கை ரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகிறவை, தொழில் வியாபார இலட்சுமிகர விடயங்கள், விவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர் கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு: ஹோட்டல் பிள்ளையார் இன், அறை இல.09 - 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். **T.P - 0779122836** நேரம்: காலை 9.00 - 8.30 வரை

(1176)

**ராஜா** யாழ்ப்பாணம்

லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி லக்ஷ்மி, சுஜாதா, நிழல்ரவி நடித்த

**சூர்யா**



ஆக்ஷன் படம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30

**நாகம்ஸ்** சுன்னாகம்

ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்



**சந்திரமுகி**

50 ஆவது நாளை நோக்கி...

காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந், மீனா நடித்த

**உளவுத்துறை**



பஸ் போக்குவரத்துபாதை இல 782 – காரைநகர் / 787 மாதகல்

காட்சிகள் : 11.00, 2.45, 5.00 (பு.நே)

**நாகதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

இலங்கையிலும் இந்தியாவிலும் ஓரேதின வெளியீடாக உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

**அறிந்தும் அறியாமலும்**

காட்சிகள் 10.30,2.30, 6.30,9.30

**மனோகரா** யாழ்ப்பாணம்

தித்திக்குதே புகழ் ஜீவா, கஜாலா,ரகுவரன் மற்றும் பலர் நடித்த

**ராம்**

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 21 - 05 - 1937



உதிர்வு 01 - 05 - 2005

**திருமதி வேலாயுதபிள்ளை தவமணி**

(சரவணை கிழக்கு, வேலணை)

இன்று 31-05-2005 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் வீட்டுக் கிரியையும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நினைவால் வாடும்
கணவர் ; பிள்ளைகள்;
மருமக்கள்;
பேரப்பிள்ளைகள்.

தற்காலிக முகவரி:
இல.266, சில்வா வீதி,
வட்டக்கச்சி. (C/4165)

# அரசுக்கு எதிரான நிலைப்பாடுகள்; பிரேமதாஸா வழியில் ஜே.வி.பி.!

## கொழும்பு இராஜதந்திரிகள் கருத்து

கொழும்பு —

சுனாமி நிவார்ண சபை என்ற பெயரில் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவளித்துள்ள நிலையில் - இதற்கு தமது முழுமையான எதிர்ப்பைக்காட்டி வரும் ஜே.வி.பி - முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் வழியைப் பின்பற்றி வருவதாக கொழும்பிலுள்ள இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளதா வது -

1987 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்தவேளை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை கைச்சாத்திடத் தீர்மானித்திருந்தார். ஆனால், பிரேமதாசாவும், லலித்தும் இதனைக் கடுமையாக எதிர்த்ததுடன், ஒப்பந்தம் கைச்சாத்திடும் வேளையிலும் அவர்கள் சமுகமளிக்கவில்லை.

இதன் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பிரேமதாசா - இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்தியப் படையினரை அவர்களது நாட்டிற்கு அனுப்புவேன் எனத் தெரிவித்தார்.

பிரேமதாசா ஒப்பந்த விடயத்தில் மிகவும் தந்திரபூர்வமாக நடந்துகொண்டபோதும், ஜே.ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதற்குக் குறுக்கே நிற்கவில்லை.

ஆனால், அவர் மக்களின் நாடித்துடிப்பை அறிந்து செயற்பட்டார். அரசியல் லாபம் தேடுவதற்காக இந்த விடயத்தை ஜே.வி.பி தூக்கிப் பிடித்ததையும் அவர் நன்கறிந்திருந்தார். எனினும், இந்த விடயத்தை சரி யான நேரத்தில் எடுத்துக் கொண்ட பிரேமதாசா நிறைவேற்று ஜனாதிபதியானார்.

பிரேமதாசாவின் இந்த வழியையே ஜே.வி.பியும் தற்போது பின்பற்றி வருகிறது. பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதை கடுமையாக எதிர்க்குமாறு ஜாதிகஹெல உறுமயவையும், தேசப்பற்றுள்ள தேசிய இயக் கத்தையும் ஜே.வி.பி. தூண்டி விடுகின்றது.

இவ்வாறு பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பை காட்டுமாறு தூண்டிவிடும் ஜே.வி.பி. - அதன் மூலம் நாட்டை நிர்வகிக்கும் திறனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்திற்கு இல்லாமல் செய்வதுடன், பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் தனதல்ல என மறுதலித்து தேர்தலில் தனது வாக்கு வீதத்தை அதிகரிக்கும் முயற்சியில் தனது நகர்வுகளை மேற்கொண்டுள்ளது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான தனது திட்டத்தை அரசாங்கத்திற்கு ஜே.வி.பி. அனுப்பியபோதும் அதனை அரசாங்கம் ஆர்வமாகப் பார்க்கும் நிலையில் இல்லை.

இதனிடையே பொதுமக்கள் மத்தியில் செல்லும் ஜே.வி.பியினர் எந்தப் பெயரில் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டாலும் அதற்கு தாம் கடுமையான




ஜே.வி.பி ஆர்ப்பாட்டம் (ஆவணப்படம்)

எதிர்ப்பைத் தெரிவிப்போம் எனவும், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு உடன்பட்டால் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடுவதற்கு தாமும் உடன்படுவதாகவும் இல்லையெனில் தமது எதிர்ப்பு தொடருமெனவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது என அவர்கள் தெரிவித்தனர்.

## ஜே.வி.பி எம்.பிக்கள் 8 பேர் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு!

### அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தகவல்



கொழும்பு —

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் ஜே.வி.பிக்குள் முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளதாகவும் - தற்போதுள்ள 39 நாடாளுமன்ற உறுப்பினர்களில் எட்டுப் பேர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பக்கம் தாவத் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் எட்டுப் பேர் அரசின் பொதுக்கட்டமைப்பை ஆதரிக்க முடிவு செய்துள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான டி.எம்.ஜயரத்ன கொழும்பு ஊட கம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் உறுதிப்படுத்தினார்.

பொதுக்கட்டமைப்பை ஜனாதிபதி சந்திரிகா செயற்படுத்தினால் அரசிலிருந்து வெளியேறுவதில்லை என ஜே.வி.பி. முடிவெடுத்துள்ளதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் - சுதந்திரக் கட்சியின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளனர்.

ஜே.வி.பி. ஆதரித்தாலும் - எதிர்த்தாலும் அந்தக் கட்சியினரின் ஒரு பகுதியினர் பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பது உற்சாகமூட்டுவதாக இருக்கின்றது.

## ஜனாதிபதி தேர்தலை நடத்தக்கோரி ஜூலையில் மக்கள் சக்தி போராட்டம்!

### ஐ.தே.கட்சி தயாராகிறது

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலை இந்த வருடம் நடத்தக்கோரி மக்கள் சக்தி போராட்டத்தை ஜூலை மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் நடத்துவதற்கு ஐ.தே.கட்சி தீர்மானித்துள்ளது.

மக்களை ஏமாற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் என்ற தொனிப்பொருளிலும் மற்றும் மக்கள் துக்கத்தை நீக்கும் நடவடிக்கை என்ற பெயரிலும், இந்த மக்கள் சக்தி நடவடிக்கையை ஐ.தே.கட்சி நடத்த தீர்மானித்துள்ளது.

ஜூலை 2 ஆம் திகதி காலை 9.30 இற்கு மாத்தறை தேவேந்திரமுனை கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகில் இதன் முதல் நடவடிக்கை ஆரம்பமாகுமென ஐ.தே.கட்சியின் பிரதிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அன்றிலிருந்து 11 நாட்கள் பாதயாத்திரையாக மிகப்பெரியளவில் மக்கள் கொழும்பை வந்தடைவர். இந்த மக்கள் வெள்ளத்தினை மூன்று பிரதான இடங்களூடாக கொழும்பு நகரத்திற்குள் கொண்டுவர ஐ.தே. கட்சி தீர்மானித்துள்ளது.

ஆயுர்வேத வைத்தியசாலைச் சந்தி, நீர்கொழும்பு வீதியில் ஜப்பான் நட்புறவுப்



ஐ.தே.க ஊர்வலம் (ஆவணப்படம்)

பாலம், தெஹிவளை நாற்சந்தியூடாக மக்கள் சக்தி நடவடிக்கையில் இணையும் மக்கள் கொழும்பு நகரினுள் உள்நுழைவர். ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க, சமரவிக்கிரம, காமினி லொக்குகே, ராஜித சேனாரட்ண, ரவி கருணாநாயக்க, சஜித் பிரேமதாச, வஜிர அபேவர்த்தன, லக்ஷ்மன் செனவிரட்ண ஆகியோர் பங்கேற்பர்.

இதனைவிட எதிர்க்கட்சித் தலைவர் ரணில், வென்னப்புவ, ஹரீத் பத்துவ, தெகியத்தகண்டிய, அரநாயக்க ஆகிய இடங்களில் மாபெரும் பிரசார கூட்டங்களை நடத்தவுள்ளனர்.

(தே)

## பொதுக்கட்டமைப்பு தொடர்பான அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த மல்வத்த மகாநாயக்கர் கோரிக்கை!

கொழும்பு —

சுனாமி அனர்த்தபொதுக் கட்டமைப்புக் குறித்து இலங்கை அரசாங்கம் மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்துமாறு மல்வத்த பீட மகாநாயக்கர் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய குழுவினருடன் திப்பட்டுவே சுமங்கல தேரர் ஆலோசனை நடத்தினார். இந்தப் பேச்சுக்களின் போது பொதுக்கட்டமைப்புத் தொடர்பான முரண்பட்ட கருத்துக்களையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கூட இதன் உள்ளடக்கம் தெரியாமல் இருப்பது குறித்து சுட்டிக்காட்டப்பட்டது.

திருகோணமலை புத்தர் சிலை குறித்தும் ஹெல உறுமய குழுவினர் இந்தச் சந்திப்பின் போது விவாதித்தனர்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜனாதிபதியின் ஆலோசகர் மனோ தித்தவெல மற்றும் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோர் தம்மைச் சந்தித்தனர் என்றும் - ஆனால் அவர்களிடம் பொதுக்கட்டமைப்பை ஆதரிப்பதாக எவ்வித உறுதிமொழியையும் தான்



வழங்கவில்லை என்றும் ஹெல உறுமய குழுவினரிடம் மகாநாயக்க தேரர் கூறினார்.

மதமாற்ற தடைச்சட்டத்தின் அவசியம் குறித்து தான் இப்போது உணர்வதாகவும் பௌத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

## பிரேதப் பெட்டியுடனான ஆர்ப்பாட்டம் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது!

### ஹக்ரப் ஹொக்லன்ட்



பிரேதப் பெட்டியுடன் போராட்டம் (ஆவணப்படம்)

கொழும்பு —

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலக வாசலில் பிரேதப் பெட்டிகளை வைத்து ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதில் எந்தவித பயனும் இல்லை என, போர்நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் - ஈ.பி.டி.பி, புளொட், மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணி பிரதிநிதிகளிடம் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டக்களப்புக்கு சென்ற இவர் - இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்தார்.

மனிதக் கொலைகள் மற்றும் வன்முறைகளைப் பொறுத்தவரை இது சட்டம் ஒழுங்கிற்கு உட்பட்டது. இதனைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது.

இந்த நிலையில் பிரேதப் பெட்டிகளை எடுத்து வந்து எமது அலுவலகம் முன்பு வைத்து ஆர்ப்பாட்டங்கள் செய்வது பிரச்சினைக்கு தீர்வாக அமையாது.

கிழக்கு மாகாணத்தில் தொடரும் வன்முறைச் சம்வங்களை தடுப்பதற்காக கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டது.

இடைநிறுத்தப்பட்டுள்ள அரசுக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பை மீண்டும் தொடர்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நீதிபதி இளஞ்செழியனுக்கு கொலை அச்சுறுத்தல்; சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது!



வவுனியா —

வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியனுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து கடிதம் எழுதிய இளைஞன் ஒருவரை சந்தேகத்தின் பேரில் வவுனியாப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தமிழ் ஆயுதக் குழு ஒன்றின் கடிதத் தலைப்பைத் தயாரித்து இந்த இளை ஞன் கடிதத்தை வரைந்துள்ளதுடன், மேலும் இதே கடித வசன அமைப்புகளுடனான அரச அதிகாரி ஒருவருக்கும், கண்ணிவெடி அகற்றும் தொண்டர் நிறுவனம் ஒன்றின் உயர் அதிகாரி ஒருவருக்கும் எழுதப்பட்ட இரண்டு கடிதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கடிதங்கள் அஞ்சல் செய்வதற்குத் தயாராக இருந்த நிலையில் சந்தேக நபருடைய அறையில் இருந்து மீட்கப்பட்டன.

கடந்த 25 ஆம் திகதி நீதிபதிக்குக் கடிதம் கிடைத்ததையடுத்து வவுனியா பொலிஸாருக்கு நீதிவான் முறைப்பாடு செய்தார்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பத்தேவலவின் பணிப்புக்கு அமைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தென்னக்கோன் பொறுப்பில் விசேட பொலிஸ் குழு அமைத்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல்கள், கடிதங்கள் இவற்றையடுத்து சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு வவுனியா பதில் நீதிவான் எஸ்.சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இவரை விசாரணை செய்த பதில் நீதிவான் ஜூன் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிச் சேவை ஆணைக்குழுவின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.


# 276 ஓட்டங்களால் பாகிஸ்தானை தோற்கடித்தது மேற்கிந்தியத் தீவுகள்!


கிறிஸ் கைல்

பிரிட்ஜ்டவுன்—

பிரிட்ஜ்டவுன் நகரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் 276 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணியை மேற்கிந்தியத் தீவுகள் அணி தோற்கடித்தது.

பிரிட்ஜ்டவுன் நகரில் கடந்த 26ஆம் திகதி ஆரம்பமான போட்டியில் முதல் இனிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் அணி அதிரடியாக ஆடி 345 ஓட்டங்களைக் குவித்தது. அடுத்து முதல் இனிங்ஸை தொடங்கிய பாகிஸ்தானால் நிலைத்துநின்று ஆட முடியவில்லை. 144 ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.



இதனால் 201 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இனிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் இந்த இனிங்ஸிலும் ஓட்டங்களைக் குவித்தது. சந்தர்போல் 153 ஓட்டங்களை எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். கடைசியில் மேற்கிந்தியத் தீவுகள் ஆடி 371 ஓட்டங்களைக் குவித்தது.

573 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றிபெறலாம் என்ற கடின இலக்குடன் பாகிஸ்தான் 2ஆவது இனிங்ஸை தொடங்கியது. முதல் இனிங்ஸை போலவே 2ஆவது இனிங்ஸிலும் மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சாளர்கள் பாகிஸ்தானை குலைநடுங்கச் செய்தனர்.



தொடக்க ஆட்டக்காரரர் சல்மான் பட் ஒரு ஓட்டம்கூட எடுக்காமல் திரும்பினார். யசீர் ஹமீட்டால் 11 ஓட்டங்களை மட்டுமே எடுக்கமுடிந்தது. யுனுஸ்கான் வந்த வேகத்திலே ஓட்டமெதையும் எடுக்காமல் ரன் அவுட்டாகி திரும்பினார். அசீம் கமல், அப்ரிடி ஆகியோர் நிலைத்து நின்று ஆடினார்கள்.

அப்ரிடி தனது அதிரடி ஆட்டம் மூலம் 122 ஓட்டங்களைக் குவித்தார். இவர் 95 பந்துகளில் 9 பவுண்டரிகள், 6 சிக்ஸர்களுடன் இந்த ஓட்டங்களை எடுத்தார். அசீம் கமல் 100 பந்துகளில் 8 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 55 ஓட்டங்களை எடுத்தார். அதன் பின்பு வந்த வீரர்களில்



அப்துல் ரசாக் 85 பந்துகளில் 4 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 41 ஓட்டங்களை எடுத்தார். மற்றவர்களால் நிலைத்து நின்று ஆட முடியவில்லை. இதனால் 296 ஓட்டங்களில் பாகிஸ்தான் சுருண்டுவிட் டது.

அதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் 276 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் வீரர் கைல் அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பவல் 2, கொலிமோர், எட்வேட் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். ஆட்ட நாயகன் விருது மேற்கிந்திய வீரர் சந்தர்போலுக்கு கிடைத்தது.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் 2 டெஸ்ட் போட்டித் தொடரில் 1-0 என்ற புள்ளியில் முன்னணியில் உள்ளது. 2ஆவது டெஸ்ட் போட்டி ஜூன் 3ஆம் திகதி ஜமெக்காவிலுள்ள சபீனா பாக்கில் நடைபெறவுள்ளது.

# பிரதேச செயலக உதைபந்தாட்டம்: சங்கானை அணி அரையிறுதியில்

நெல்லியடி—

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணி அரையிறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை வெற்றிகொண்டதன் மூலம் சங்கானை பிரதேச செயலக அணி இந்தத் தகுதியை பெற்றுக் கொண்டது.

பிற்பகல் 4.45 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தின் முதல்பாதி ஆட்டம் நிறைவடைவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்னர் பருத்தித்துறை பிரதேச செயலக அணி வீரர் தீபன் தனது அணிக்காக ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

முதல்பாதி ஆட்டத்தை பருத்தித்துறை பிரதேச செயலக அணி இந்தக் கோலின் உதவியுடன் தனது பக்கம் வைத்துக் கொண்டது. 1-0 என்ற அடிப்படையில் முதல்பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இடைவேளைக்குப்பின்னர் தொடர்ந்து மறுபாதி ஆட்டம் நடைபெற்றது. ஆட்டம் முடிவடைவதற்கு மூன்று நிமிடங்கள் இருக்கையில் சங்கானை பிரதேச செயலக அணி வீரர் நித்தியானந்தன் தனது அணிக்காக ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இந்தநிலையில் 1-1 என்ற அடிப்படையில் ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. வெற்றிதோல்வியை தீர்மானிப்பதற்கு இரு அணிகளுக்கும் தலா 5 தண்டனை உதைகள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை பிரதேச செயலக அணி தனக்கு கிடைத்த சந்தர்ப்பங்களில் ஒரேயொரு சந்தர்ப்பத்தையே கோலாக்கியது.

சங்கானை பிரதேச செயலக அணி தனக்கு கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களை கோலாக்கியது.

இதனால் ஒருகோல் முன்னிலையில் சங்கானை பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (12)

# மாவட்ட மட்டத்தில் சாதனை



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற தடகள போட்டியின் 15 வயதுப் பிரிவில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மாணவன் மோகனராஜன் கஜன்ராஜ் நீளம் பாய்தலில் 5.14 மீற்றர் தூரம் பாய்ந்து முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்ததுடன், மாகாண மட்டப் போட்டிக்கும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுனாமி நிவாரண கிரிக்கெட்

# எம்.சி.சி.லெவன் அணிக்கு ஸ்ரீபன் பிளெமிங் கப்டன்!

லண்டன்—



லண்டனில் நடைபெறவுள்ள சுனாமி நிவாரண கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. சத்திரசிகிச்சை செய்துகொண்டதால், டெண்டுல்கருக்குப் பதிலாக பிளெமிங் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் அடுத்தமாதம் 14ஆம் திகதி சுனாமி நிவாரண நிதிதிரட்டும் கிரிக்கெட் போட்டி நடைபெறவிருக்கிறது. இதில் எம்.சி.சி.லெவன் அணியும், உலக லெவன் அணியும் மோதவுள்ளன.

இதில் எம்.சி.சி.லெவன் அணிக்கு டெண்டுல்கர் கப்டனாக இருப்பார் என்றும், உலக லெவன் அணிக்கு லாரா கப்டனாக இருப்பார் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சமீபத்தில் டெண்டுல்கர் சத்திரசிகிச்சை செய்துகொண்டார். முழங்கை காயத்துக்கு சத்திரசிகிச்சை செய்து சிகிச்சை பெற்றுவரும் டெண்டுல்கர் இன்னும் 4 மாதத்துக்கு எந்தப் போட்டியிலும் விளையாட மாட்டாரென்று டாக்டர்கள் அறிவித்துள்ளனர்.

இதனால் எம்.சி.சி. லெவன் அணி கப்டன் பதவியில் இருந்து டெண்டுல்கர் நீக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக அந்த அணிக்கு புதிய கப்டனாக நியூஸிலாந்து வீரர் ஸ்ரீபன் பிளெமிங் இருப்பாரென போட்டி அமைப்புகுழுவினர் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர். இதுகுறித்து எம்.சி.சி. கிரிக்கெட் சபைத் தலைவர் ஜோன் ஸ்ரீபன் கூறியிருப்பதாவது -

டெண்டுல்கர் சிகிச்சை பெற்றுவருவதால், எம்.சி.சி. லெவன் அணியின் கப்டன் மாற்றப்பட்டிருக்கிறார். இந்திய வீரர் ஒருவர் குறைவதால் அதை ஈடுகட்ட வி.வி.எஸ்.லக்ஷ்மனுக்கு அழைப்பு விடுத்ததையடுத்து அவரும் அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

டெண்டுல்கர் விளையாடாவிட்டாலும் ஜூன் 14ஆம் திகதி மைதானத்துக்கு வந்து எங்களோடு இருப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

புதிய இரு அணி வீரர்களின் பட்டியல் வருமாறு -

எம்.சி.சி.லெவன் அணி -


ஸ்ரீபன் பிளெமிங் (கப்டன்), கிறிஸ் கைல், சர்வான், வி.வி.எஸ். லக்ஷ்மன், கலிஸ், அன்டி பிளவர், சங்கஹாரா, பொலக், கும்ளே, முத்தையா முரளிதரன், சொகைப் அக்தர்.

உலக லெவன் அணி -

லாரா (கப்டன்), ஷேவாக், ஜெயசூர்ய, கிரேம் சிமித், ராவிட், சந்தர்போல், கிறிஸ் கெய்ன்ஸ், வோன், சமிந்தவாஸ், மொகமட் சமி, என்ரினி.

## பிரெஞ் ஓபன் ரெனிஸ்

# 15 வயது பல்கேரிய வீராங்கனை காலிறுதி போட்டிக்கு முன்னேறினார்!


கரடன்ட்சேவா

பாரிஸ்—

பிரெஞ் ஓபன் காலிறுதிக்கு முதல்நிலை வீராங்கனையான லின்ட்சே டேவன்போர்ட் தகுதி பெற்றார். இந்தத் தொடரின் இளம் நட்சத்திரம் செசில் கரடன்ட்சேவாவின் வெற்றிநடை தொடர்கிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் நான்காவது சுற்றுப் போட்டியில் அமெரிக்காவின் டேவன் போர்ட், பெல்ஜியத்தின் கிளைஸ்டர்ஸை சந்தித்தார். முதல் செட்டை 20 நிமிடத்தில் கைப்பற்றி அசத்தினார் கிளைஸ்டர்ஸ். அதன் பின்பு இடது மூட்டில் ஏற்பட்ட காயம் இவருக்கு வினையாக அமைந்தது.


மரி பியர்ஸ்

இதனைப் பயன்படுத்திக் கொண்ட டேவன் போர்ட் 1-6, 7-5, 6-3 என்ற செட்களில் வெற்றி பெற்றார். பிரான்சின் மேரி பியர்ஸ் 6-1, 1-6, 6-4 என்ற செட்களில் சுவிற்சர்லாந்தின் பேட்டிஸ்கினடரை வீழ்த்தினார். ரஷ்ய வீராங்கனை எலினா லிகோட்சேவா 7-6, 5-7, 7-5 என்ற செட்களில் சக வீராங்கனை டெமன்ரீவாவைத் தோற்கடித்தார்.

மற்றொரு போட்டியில் 15 வயதான பல்கேரிய வீராங்கனை கரடன்ட்சேவா, சுவிற்சர்லாந்தின் இமானுவேல் கக்ளியார்டியை 7-5, 6-3 என்ற நேர் செட்களில் வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். மூன்றாவது சுற்றில் வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தி அதிர்ச்சி ஏற்படுத்திய கரடன்ட்சேவாவின் வெற்றி தொடர்ந்தால், மிக இளம் வயதில் பிரெஞ் ஓபனில் சம்பியன் பட்டம் வென்றவர் என்ற சாதனை படைக்கலாம்.


1990இல் மொனிகா செலஸ் (16வயது 6 மாதங்கள்) ஜேர்மனியின் ஸ்டெபியை வீழ்த்தி சாதனை படைத்திருந்தார். பிரெஞ் ஓபன் காலிறுதிக்கு தகுதி பெற்றதை நம்பவே முடியவில்லை என்று கூறி பரவசப்படுத்தினார் கரடன்ட்சேவா. முன்னதாக நடைபெற்ற மூன்றாவது சுற்றுப் போட்டியில் பிரான்சின் மௌரிஸ்மோ, சேர்பியாவின் இவானோவிக்கிடம் 4-6, 6-3, 4-6 என்ற செட்களில் தோல்வியடைந்தார்.


கில்லர்மே

ஆண்கள் ஒற்றையர் மூன்றாவது சுற்றுப் போட்டியில் ஜேர்மனியின் நிக்கிலஸ் கெய்பர், ரஷ்யாவின் இகோர் அன்ரீவை 6-4, 7-6, 3-6, 6-4 என்ற செட்களில் வீழ்த்தினார். மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் மாரட் சபின், ஸ்பெயினின் ஜுவான் கார்ல்ஸ் பெரேராவை 7-6 (7-5), 7-5, 1-6, 7-6 (7-2), ஆஜென்ரீன வீரர் கில்லர்மோ கேனஸ் 6-3, 7-6, 2-6, 6-7, 8-6 என்ற செட்களில் பிரான்சின் ஹென்றி மத்தியூவை போராடி வீழ்த்தி நான்காம் சுற்றுக்கு முன்னேறினார்.


டேவன்போர்ட்

# பி.பி.சி ட்ரஸ்ட் நடத்திய பயிற்சிக் கருத்தரங்கு





யாழ்ப்பாணம்

இலங்கையிலுள்ள அச்சக மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதிஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்களுக்கான 'ஊடகத்துறையின் புதிய போக்கு' என்ற ஐந்து நாள் பயிற்சிக் கருத்தரங்கு களை - இரண்டு கட்டங்களாக பி.பி.சி ட்ரஸ்ட் அண்மையில் நடத் தியது.

அச்சு ஊடகங்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு - கடந்த 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதிவரை ஹபரண லொட்ஜ் ஹோட்டலில் நடத்தப்பட்டது.

ஜேர்மனியின் பிளிற் அமைப்பின் நிதியுதவியுடன், பி.பி.சி நடத்திய இந்தக் கருத்தரங்கில், ஊடகத்துரையில் 37 வருட அனுபவம் வாய்ந்தவரும், தற்போது பி.பி.சி இங்கிலாந்து பதிப்பு இணையத்தள ஆசிரியராகப் பணியாற்றுபவருமான ஹியூ பேளின் பிரதான பயிற்றுநராகப் பணியாற்றினார்.

அத்துடன் பி.பி.சி சிங்கள சேவைப் பணிப்பாளர் பிரியத் லியனகேயும் இந்தக் கருத்தரங்கின் இறுதியில் கலந்துகொண்டார்.

இந்தக் கருத்தரங்கில் 'சண்டே ரைம்ஸ்' செய்தி ஆசிரியர் அன்ரனி டேவிட், 'தி.ஐலண்ட்' செய்திப் பிரிவைச்சேர்ந்த சாமிந்ர பெர்னாண்டோ, 'டெய்லி நியூஸ்' செய்தி ஆசிரியர் றொட்னி, 'லங்காதீப' பிரதி ஆசிரியர் இந்திராணி பீரிஸ், 'லக்பிம' பிரதி ஆசிரியர் அயூப், 'லேக்ஹவுஸ்' சிங்கள வெளியீடுகளின் நிர்வாக ஆசிரியர் சாமர ஜனராஜ் பீரிஸ், 'நவமணி' பிரதி ஆசிரியர் முஸம்மில் ஆகியோருடன் வடபகுதியிலிருந்து வெளிவரும் தினக்குரல், ஈழநாதம், நமது ஈழநாடு ஆகியவற்றின் சார்பிலும் பிரதி ஆசிரியர்கள் மற்றும் செய்தி ஆசிரியர்கள் என மொத்தம் பத்துப்பேர் பங்குபற்றினர்.

மறைந்த ஊடகவியலாளர் டி.சிவராமுக்கு மௌன அஞ்சலி செலுத்தி ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத்தரங்கு, 6 ஆம் திகதி சான்றிதழ் வழங்கலுடன் நிறைவு பெற்றது.

பி.பி.சி ட்ரஸ்ட் பயிற்சி இணைப்பாளர் ஜெரோம் சேனநாயக்கவின் ஒழுங்குபடுத்தலில் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில், பி.பி.சி ட்ரஸ்ட் தெற்காசியப் பகுதிகளுக்கான பயிற்சி இணைப்பாளர் சாம் மில்லர், பிளிற் அமைப்பின் இணைப் பாளர் சுலோசனா பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

மொழிபெயர்ப்பாளர்களாக பராக்கிரம மற்றும் லீலா ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

இதேவேளை கடந்த 9 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை இலத்திரனியல் ஊடகத்துறையினருக்கான கருத்தரங்கும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு காணிகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை

பருத்தித்துறை

வல்லிபுர ஆழ்வார் கோயில் சுற்றாடலுக்கு அப்பால் உள்ள 605 ஏக்கா கணிகளை சுனாமியால் பாதிக்கப்பட்ட காணியற்றோருக்கு பகிர்ந்தளிக்கப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமராட்சி வடக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டு காணியற்றவர்களுக்கும், நாகர்கோயிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்குப் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (17)

## இஸ்லாமாபாத் ஒன்றுகூடலில் ரவிராஜ் எம்.பியும் பங்கேற்பு!

யாழ்ப்பாணம்

பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமா பாத்தில் - 20 ஆம் திகதி வரை நடைபெற்ற தெற்காசிய சுதந்திர ஊடக வியலாளர் அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ந.ரவிராஜ் கலந்துகொண்டார்.

இந்த அமைப்பின் இலங்கை நாட்டவருக்கான அமைப்பாளராகத் தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் அமீன் கடமையாற்றுகிறார். இந்த ஒன்றுகூடல் நிகழ்வில், தினக்குரல் பத்திரிகையின் வாரவெளியீட்டுப் பொறுப்பாளர் பாரதியும் கலந்துகொண்டார்.

## நடனத்துறை வளாகத்தில் போதிய வசதிகள் இன்மை

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறை வளாக விரிவுரை மண்டபத்தில் - கற்றலுக்கான வசதிகள் போதியளவு இல்லாமையால் மாணவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

விரிவுரை மண்டபங்களில் போதியளவு தளபாடங்கள் இன்மையால் மாணவர்கள் பாதிக்கப்படுவதுடன், சிற்ப செய்முறை வகுப்புகளுக்கு - பிரத்தியேகமான இடமின்மையால் மர நிழல்களிலும், மண்டபத்தின் தாழ்வாரப் பகுதிகளிலுமே சிற்ப செய்முறைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மாணவர்களுக்கான தேவைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களது கற்றல் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மாணவர்கள் தெரவித்தனர்.

நடனம் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் 900 வரையான மாணவர்கள் கல்வி கற்பது குறிப்பிடத்தக்து. (91)

## ஆலயங்களில் ஒலிபெருக்கி பாவனை பரிசீலனையின் பின்னரே அனுமதி

யாழ்ப்பாணம்

ஆலயங்களில் ஒலிபெருக்கிகளைப் பாவிப்பதற்கு அதற்கான அனுமதிகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே வழங்கப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை யாழ். செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் அந்தக் கூட்டத்தில் - ஆலயங்களில் ஒலிபெருக்கிகளின் சத்தத்தால் சூழல் மாசடைகிறது.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். இதனால் அவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது.

அடுத்து வரும் சில நாட்களில் உயர்தர பரீட்சை ஆரம்பமாக இருப்பதால், பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களின் நலன் கருதி, இந்தச் சட்டத்தைக் கடுமையாக அமுல்படுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மேலும் இது தொடர்பாக அனுமதி வழங்குதல் குறித்து பொலிஸாருக்கு அறிவுறுத்துவது எனவும் அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## சின்னஞ்சிறு செய்திகள்

### மதகு திருத்தவேலை ஆரம்பம்

பருத்தித்துறை

யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் கல்வியங்காடு மூன்றாம் கட்டைச் சந்தி மதகு - திருத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் காரணமாக குறிப்பிட்ட இந்த வீதி மூடப்பட்டு - இதற்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருக்கும் வீதியூடாகவே தற்பொழுது போக்குவரத்துச் சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

### பருத்தித்துறை பிரதேசத்தில் தற்காலிக வீடுகள் அமைப்பு

பருத்தித்துறை

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 1076 தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதில் 842 வீடுகள் வேலைகள் முடிவுற்ற நிலையில் உள்ளன. மிகுதி விரைவில் முடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட மேலும் 525 வீடுகள் தேவையென, பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. இந்தத் தற்காலிக வீடுகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் அமைத்து வருகின்றன.

## இடம்பெயர்ந்த 8 குடும்பங்கள் நெடுந்தீவில் மீளக் குடியமர்வு

நெடுந்தீவு

யுத்த நடவடிக்கைகளின்போது இடம்பெயர்நது அகதி முகாம்களில் தங்கியிருந்த 8 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேர் - கடந்த வியாழக்கிழமை யு.என்.எச்.சி. ஆரின் உதவியுடன் நெடுந்தீவில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் இருந்த இவர்கள் - விமானம் மூலம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு ,அங்கு வைத்து அவர்களது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, நெடுந்தீவில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இராணுவ கெடுபிடி காரணமாக நெடுந்தீவில் இருந்து இந்திய மீன்பிடி இழுவைப்படகுகள் மூலம் சென்று, அங்கு முகாம்களில் தங்கியிருந்தவர்களே இவ்வாறு மீளக் குடியமர்த்தப்பட்டனர்.

## வீதியில் சென்ற மூதாட்டியின் தாலிக்கொடி அபகரிப்பு

கோண்டாவில்

கோண்டாவில் மேற்கு வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்த மூதாட்டி ஒருவரின் தாலிக்கொடி - மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்துச் செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை 11 மணியளவில் கோண்டாவில் மேற்கு ஸ்ரேசனடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த சாரதாதேவி செல்வம் (வயது -54) என்பவருடைய பத்துப் பவுண் எடையுடைய தாலிக்கொடியே அறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (82)

## உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்களுக்கு மக்கள் தொடர்பாடலுக்கான பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்

வன்முறையற்ற தொடர்பாடலுக்கான பயிற்சிநெறியையும், அதனோடு இணைந்த சமூக மானிடவியல் மனிதஉரிமை சம்பந்தமான பயிற்சிநெறி ஒன்றையும், சுயாதீன மனித உரிமைகள் முறைப்பாட்டு நிலையம் ஜூன் மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தவுள்ளது.

இதில் அரச அதிகாரிகள், ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், வங்கியாளர்கள், ஊடகவியலாளர்கள், உயர்கல்வி கற்கும் மாணவர்கள் உட்பட 50 பேர் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இன்று குடாநாட்டில் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் - அரச அதிகாரிகள் மூலம் பொதுமக்கள் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முயற்சிக்கின்றபோது பொருத்தமற்ற தொடர்பாடல்களாலும், பேச்சுவார்த்தைகளாலும் முறுகல் நிலை தோன்றுவது சகஜமாகவுள்ளது.

இந்த நிலையைத் தொடரவிட்டால் சமூகத்தில் ஓர் சமச்சீரற்ற நிலைமை தோன்றலாம். இதனால் குறிப்பிட்ட தரப்பினருக்கு இந்தப் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியை வன்முறையற்ற தொடர்பாடலுக்கான பயிற்சிநிலையத்தின் பணிப்பாளர் லூர்தாஸ் வில்லியம் மற்றும் பிரபல சட்டத்தரணி றமணி தொட்டகமுவ, சட்டத்தரணி தரங்கா அமரசிங்க, சமூகவியல் தொடர்பாடல் விசேட விரிவுரையாளர் செந்தூரன் ஆகியோரால் நடத்தப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறிக்குத் தெரிவு செய்யப்படுவோருக்கு இலவசமாகப் பயிற்சி வழங்குவதோடு, உணவு வசதிகளுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக இந்த அமைப்பின் இணைப்பாளர் மோகன் தெரிவித்தார்.






சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பால்மா பைக்கற்றுக்களை மலிபன் கம்பனியினர் வழங்கினர். இந்த நிகழ்வில் - மலிபன் கம்பனியின் வடக்கு-கிழக்கு பிராந்திய முகாமையாளர் ஆர்.சசீந்திரன், பிரதேச செயலர் இ.வரதீஸ்வரனிடம் பால்மா பைக்கற்றுக்களை கையளிப்பதையும், அருகில் எஸ்.வி.எம். முகாமையாளர் தியாகராசாவையும், நலன்புரி நிலையங்களில் வசிக்கும் குழந்தைகளுக்கான பால்மா பைக்கற்றுக்களை யாழ். விற்பனை பிரதிநிதி க.சபாநாதன் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

## பல்சுவைச் சிதறல்

பல்சுவை அரங்கு

# தம்மைப் படம் பிடிக்கும் செவ்வாய்க் கலங்கள்



செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி, மணிக்கு 11 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் பறந்தபடி, இரண்டு செவ்வாய்க் கிரக ஆய்வுச் செய்மதிகள் ஒன்றை ஒன்று படம்பிடித்து, அவற்றைப் பூமிக்கு அனுப்பியுள்ளன.

மார்ஸ் ஒடிசி கலமும், மார்ஸ் குளோபல் சேர்வயர் கலமும் தம்மை ஒன்றை ஒன்று பறந்தபடியே படம் பிடித்துள்ளன.

நாஸாவால் சேர்வயட் 1997 இலும், ஒடிசி 2001 இலும் செவ்வாயை நோக்கி அனுப்பப்பட்டன. இவற்றைவிட தற்போது ஐரோப்பிய விண் ஆய்வகம் 2003 இல் அனுப்பிய மார்ஸ் எக்ஸ்பிரஸும் செவ்வாயைச் சுற்றி வருகிறது.

இவ்வாறு சுற்றும்போது நாஸாவின் இரண்டு கலங்கள் ஒரு தடவை 15 கிலோ மீற்றர் தொலைவில் சமாந்தரமாகச் சென்றபோதே அவை படம் பிடித்துக்கொண்டன.

# சுனாமியால் பிழைத்த ஆமை



சுனாமியால் மனிதர்களுக்கு பேரழிவு ஏற்பட்டபோதிலும், அதனால் நன்மையடைந்த ஓர் உயிரியும் உண்டு.

தமிழக கரையோரக் கடற்பகுதியில் காணப்படும், அருகிவரும் உயிரினமான Olive Ridley கடலாமைகளே சுனாமியால் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றன.

தமிழக மீனவர்களின் ட்ரோலர்களின் வலைகளில் அடிக்கடி சிக்கி, உயிர் துறக்கும் இந்த வகை ஆமைகள் - அருகிவரும் உயிரினப் பட்டியலிலும் இடம்பிடித்துள்ளன.

எனினும், சுனாமியால் தற்போது தென் தமிழகக் கரையோரங்களின் ட்ரோலர் மீன்பிடி பாதிக்கப்பட்டுள்ளதால், இந்த வகை ஆமைகள் எதிர்நோக்கிய ஆபத்தும் நீங்கியுள்ளது. கடந்த நான்கு மாத காலப்பகுதியில் இவற்றின் பெருக்கம் கடந்த ஆண்டுகளை விட இரட்டிப்பாகியுள்ளதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# இதயப் பாதுகாப்பு




70 வயதுக்கு மேற்பட்ட நோயாளிகள் - தமது இதய சம்பந்தமான நோய்களைக் குணமாக்குவதற்கு அஸ்பிரின் குளிகைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், இவை இதய நோய்களைக் குணமாக்கினாலும், இவற்றினால் வரக்கூடிய பக்கவிளைவுகளைப் பார்க்கும்போது, அவை மிகவும் பாரதூரமானவையாக இருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். 70 வயதுக்கும் 74 வயதுக்கும் இடைப்பட்ட நோயாளிகளில் 20,000 பேருக்கு இதயநோய் முற்றாகவே இல்லை. ஆனால் அவர்களுடைய உடலில் புதிய புதிய நோய்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. இதய நோய்க்குரிய மருந்தை எடுக்கும் பொழுது, சிலருக்குப் பக்கவாதம் ஏற்படுகிறது. பிரித்தானியாவில் மட்டும் ஒவ்வொரு 3 நிமிடங்களுக்கும் இதய நோயால் ஒருவர் இறக்கிறார். ஆனால் வருடத்துக்கு மட்டும் 70 ஆயிரம் பேர் இந்த இதயநோயால் இறந்துகொண்டே செல்கிறார்கள். அவுஸ்ரேலிய நாட்டில் அஸ்பிரின் பாவனையைக் குறைக்கக்கூடிய வகையில், அறிவித்தல் வரும் எனக் கூறப்படுகிறது.

# பட்டை தீட்டுக்கல் சீனாவில் மீட்பு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வைரங்களை மெருகூட்டப் பயன்படுத்திய புதிய வகை கற்கள் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கற்காலத்தில் கோடாரிகளை தீட்டப் பயன்பட்டன என்றே முதலில் நம்பப்பட்டபோதிலும், இவை வைரக்கற்களை தீட்டப் பயன்பட்ட புதிய வகை கற்களே என சீனா அமெரிக்க ஆய்வாளர்கள் மேற்கொண்ட கதிரியக்கப் பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது. இந்தக் கற்கள் Corundum என்ற கனியத்தினாலானது.





இதுவே வைரத்துக்கு அடுத்தபடியான, உறுதியான கனியம் எனக் கூறப்படுகிறது.

# உற்சாகம் தரும் சிவப்பு

விளையாட்டு வீரர்களுடைய உடை செந்நிறமாக இருப் பது அவர்களுக்கு ஒரு சிறப்பு என டர்கம் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தற்போது கூறிக்கொண்டு வருகிறார்கள். உளவியல் ரீதியாகவும், பௌதீகவியல் ரீதியாகவும் உற்சாகத்தைத் தரக்கூடியதாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளைப் பார்த்தால், கூடுதலான பதக்கங்கள் வென்ற ஒலிம்பிக் வீரர்கள் சிவப்பு உடைகளையே அணிந்திருந்தார்கள். செந்நிறம் என்பது எதிராளியின் மனதில் ஒருவகைப் பயத்தைக் கொடுக்கிறது எனக் கூறப்படுகிறது உளவியல் நிபுணர்களால். குரங்குகளிலும், சாதாரண குரங்குகளைக் காட்டிலும், செந்நிறக் குரங்குகள் மிகவும் கொடியனவாகவும், உற்சாகம் மிகுந்தனவாகவும் இருக்கின்றன. யூரோ 2004 உதைபந்துப் போட்டிகளை எடுத்துநோக்கினால், சிவப்புநிற ஜேர்சிகளை அணிந்த அணிகள் கூடிய கோல்களைப் போட்டதும் குறிப்பிடத்தக்கது.





# மாற்ற முடியாத சிறுநீரகங்கள்

கிட்னிகளை மாற்றுவது தற்போது பிழையாகிக் கொண்டு வருகிறது. இது ஏன் என ஆராய்ந்து நோக்கினால், ஒருவருடைய உடலில் காணப்படுகின்ற ஒவ்வாமையே காரணமாகிறது. உண்மையில் ஒரு சிறுநீரகத்தை மாற்றும்பொழுது ஒருவருடைய வாழ்க்கையில் 11 தொடக்கம் 14 வருடங்கள் சீவியவீதம் அதிகரிக்கிறது என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஏறக்குறைய 3 ஆயிரம் நோயாளிகளை எடுத்து ஆராய்ந்து நோக்கும்பொழுது, அவர்களில் கூடுதலானவர்களுக்கு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்யமுடியாதுள்ளது. இதற்குரிய காரணங்களாக - நோயாளிகளில் காணப்படுகின்ற நோய்கள் மற்றும் அவர்களுடைய இரத்தத்தில் காணப்படுகின்ற கலங்களின் தன்மை ஆகியன இதற்குரிய முக்கிய காரணங்களாக வைத்திய நிபுணர்களால் கூறப்படுகிறது. அதனைவிட இரத்த அமுக்க வேறுபாடுகளும் இவற்றுக்கான ஒரு குறைபாடு எனக் கருதப்படுகிறது.



## திரை விமர்சனம்

### கனாகண்டேன்

ஒளிப்பதிவாளர் ஜே.வி. ஆனந்த் இயக்கிய படம் இது. ஏழையாகிய ஶ்ரீகாந் படித்து, கடல் நீரைக் குடிநீராக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வெற்றி பெறுகிறார். இவருக்கு ஒருவரிடமிருந்தும் உதவிகள் கிட்டவில்லை. இவருடைய தோழி கோபிகா இவருக்கு உறுதுணையாக இருக்கின்றார். அத்துடன் இருவரும் காதலித்துத் திருமணமும் செய்து கொள்கின்றார்.



இருவருமாக ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில், கோபிகாவின் நண்பர் பிருதிவிராஜைச் சந்திக்கிறார்கள். பெரிய பணக்காரராகிய இவர் - ஶ்ரீகாந்துக்கு உதவி செய்வதாகக் கூறி, இவரது கண்டுபிடிப்புகளில் உரிமையைப் பறித்துவிடுகிறார். இதிலிருந்து இவர்கள் எவ்வாறு மீண்டார்கள் என்பது தான் மீதிக் கதை.

ஶ்ரீகாந் - கோபிகா இருவரும் காதல் காட்சிகளில் நன்றாகவே நடித் திருக்கிறார்கள். வில்லனாக நடித்திருக்கிறார் பிருதிவிராஜ். நடிப்பு பாராட்டு தலுக்குரியது. சரியான வட்டிக்கடைக்காரனாக நடித்து இருக்கிறார். வித்தியாசமான வில்லத்தனம்.

விவேக் நகைச்சுவை கொஞ்சம் கூடுதல். கோபிகாவின் தாயாக வனிதா நடித்திருக்கிறார். பிருதிவிராஜுடைய மகளாக ஷாலினி நடித்திருக்கிறார். பொலிஸ் அதிகாரியாக ஶ்ரீமன் வருகிறார்.

கதை, வசனம், திகில் கதை எழுதும் சுபா. சண்டைப் பயிற்சி கனல் கண்ணன். ஒளிப்பதிவாளர் சௌந்தர்ராஜன். பார்த்துப் பார்த்து கமராவால் சுட்டிருக்கிறார். இசை வித்தியாசாகர். பாடல்கள் மெல்லிய இசையில் கேட்க இனிமையாக உள்ளன. ஒளிப்பதிவாளர் ஜே.வி. ஆனந்துக்கு ஏறுமுகம் தான்.

– லாவண்யா.

## விலங்குகளை கண்காணிக்க சிம் காட் நுட்பம்


டொல்பின்களின் நடமாட்டங்களைக் கண்டறிய, கைத் தொலைபேசி தொழில் நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. அதற்காக அவற்றிடம் கைத் தொலைபேசி வழங்குவது என்றில்லை. கைத் தொலைபேசியின் சிம் காட் இந்த டொல்பின்களில் கழுத்துப் பட்டியாக அணிவிக்கப்படும்.




தென்னாபிரிக்க ஆய்வாளர்கள் இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர். ஏற்கனவே தரை மற்றும் கடலில் உயிரினங்களின் நடமாட்டங்களைக் கண்காணிக்க கைத் தொலைபேசி தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆபிரிக்காவில் யானைகள், வரிக்குதிரைகள், குரங்குகள் உட்பட 200 விலங்குகள் இவ்வாறு கண்காணிக்கப்படுகின்றன. செய்மதி மூலமான கண்காணிப்பை விட, கைத் தொலைபேசியின் சிம் ஊடான கண்காணிப்பு மலிவானதாக உள்ளதாம்.

## பிழைவிடும் மருத்துவமனைகள்

தவறான மருந்தால் கிறீஸ்பீல்ட் மருத்துவ மனையில், பிறந்து 15 நாட்கள் மட்டுமேயான ஒரு குழந்தை இறந்திருக்கிறது. இது அந்தப் பிரதேசத்தின் மருத்துவமனை வட்டாரங்களில் ஒரு பரபரப்பை உண்டுபண்ணியிருப்பதாகக் கூறப்படுகிறது. இது தங்களுடைய பிழையல்ல, தாதிகளுடைய பிழைதான் என வைத்தியர்களும், தாதிகள் வைத்தியர்களையும் தற்போது குற்றம் சாட்டிக் கொண்டு வருகின்ற நிலையில் இருக்கிறார்கள்.




இந்தப் பிள்ளைக்கு இதய நோய் இருந்ததாகவும், அதற்குரிய டைகொச்சின் மருந்து 22 மைக்கிறோ கிராம்கள் கொடுப்பதற்குப் பதிலாக, 220 மைப்பிறோ கிராம்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய அதிகரித்த மருந்து, குழந்தையை ஒரேயடியாகப் பரலோகத்துக்கு அனுப்பியிருக்கிறது. 15 நாட்கள் மட்டுமே வயதுடைய குழந்தைக்கு அதிக மருந்து கொடுக்க நினைத்த பொழுது, இந்தத்தாதிகள் ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தார்களா?

## சின்னமுத்து வைரஸ்; மேலும் ஆராய முடிவு

சின்னமுத்து வைரஸ் குறித்து மேலும் ஆய்வுகளை மேற்கொள் வது என, ஜெனீவாவில் கூடிய உலக சுகாதார ஸ்தாபனம் முடிவு செய்துள்ளது. இந்த நோய்க்கு எதிரான வைரஸ் எதிர்ப்பு மருந்தை செயற்திறன் மிக்கதாக மாற்றுவதற்குப் புதிய ஆய்வுகள் தேவை எனக் கூறப்படுகிறது.



ஒரு காலத்தில் மில்லியன் கணக்கில் பலி கொண்ட சின்னமுத்து நோய் 1970 ஆம் ஆண்டுக்குப் பின் உலகிலிருந்து முற்றாக அழிக்கப்பட்டது எனினும் ரஷ்ய - அமெரிக்க ஆய்வகங்களில் இன்னும் இந்த வைரஸ்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

உயிரியல் ஆயுதமாக இவற்றைப் பாவிக்க வேண்டாம் எனத் தடுப்பதில் உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது போராடி வருவது குறிப்பிடத்தக்கது.

## வசதிகளுடன் மொபைல்போன்கள்

உலகின் முதல்தர கையடக்கத் தொலைபேசி நிறுவனமாகிய நொக்கியா - தற்போது என் - கேஜ் என்ற ஒரு புதியவகைக் கையடக்கத் தொலைபேசி ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய தொலைபேசிகளில், சிறிய டிஸ்க் போடக்கூடிய வசதிகளும் ஏற்படலாம் எனக் கூறப்படுகிறது.



இத்தகைய தொலைபேசிகள் 2005 ஆம் ஆண்டளவில் 25 மில்லியன்கள் விற்பனையாகும் எனவும், அது 2008 ஆம் ஆண்டளவில் 250 மில்லியன்களாக அதிகரிக்கும் எனவும் கூறப்படுகிறது. இத்தகைய தொலைபேசிகளில் கூடுதலாக ஈ 3 விளையாட்டு அம்சங்கள் அதிகமாக இருக்கும் எனக் கூறப்படுகிறது. முதல் தடவையாக 3 டி மொபைல் கேம்கள் இங்கே உருவாக்கப்பட இருக்கின்றன. உண்மையில் இது ஒரு மிக முக்கியமான ஒரு அம்சமாகத்தான் இருக்கிறது. தற்போது மொபைல் போன்கள் வெறுமனே கதைப்பதற்காக மட்டும் பயன்படவில்லை. அவற்றிலே காணப்படுகின்ற பலதரப்பட்ட அம்சங்கள் மக்களை வியப்புக்கும், ஆசையைத் தூண்டுவதற்காகவும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

## புதிய இனக் குரங்குகள் தன்சானியா மலையில்

முன்னெப்போதும் அறிந்திராத குரங்கு இனங்கள் தென் தன்சானியா மலைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை மோசமாக அழிவடைந்து வரும் இனங்களாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.





மலைப்பகுதி Mangabey என அழைக்கப்படும் இந்த வகைக் குரங்குகள் 'பபூன்' வகை குரங்குகளின் உறவு எனத் தெரிவிக்கப்படுகிறது. Mangabey (Lophocebus Kipinji) வகை குரங்குகள் மண் நிறமானவை. 3ஆயிரம் மீற்றர் உயரத்தில் மலைகளில் வாழ்பவை. இவை விட்டுவிட்டு நாய் போல் குரைக்கும் குரல் எழுப்பும். குளிரைத் தடுப்பதற்காக அடர்ரோமம் கொண்டவை. காடழிப்பே அழிந்து வருவதற்குக் காரணம் எனப்படுகிறது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசாங்கத்தால் எந்தவித உதவியுமில்லை

## பாதிக்கப்பட்ட கடற்தொழிலாளர் விசனம்

முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டம் தொடக்கம் - காரைநகர் வரையுமுள்ள அனைத்துக் கடற்கரையோரக் கிராமங்களும் சுனாமி அனர்த்தத்தால் முற்றாக அழிந்துள்ளன.

பல கோடி ரூபா பெறுமதியான கடற்தொழில் உபகரணங்கள், வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 500 வரையானோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இன்றுவரை அரசாங்கத்தால் எந்தவித நட்டஈடுகளோ, நிவாரணங்களோ கிடைக்கவில்லை.

கடற்தொழில் திணைக்களம்- கடற்தொழிலாளர்களின் உயிரிழப்பு, தொழில் இழப்பு மற்றும் உடைமைகள் இழப்புக் குறித்துப் பல படிவங்களில் தரவுகளை நிரப்பியபோதும், பலன் எதுவும் கிடைக்காதமை குறித்து கடற்தொழிலாளர் அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அவ்வப்போது அரசாங்கத்தின் சார்பில் கடற்தொழில் அமைச்சின் உயர் அதிகாரிகள், தென்னிலங்கை கடற்தொழில் உயர்மட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் இங்குவந்து, கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரிடம் தேவைகள், குறைகளைக் கேட்டறிந்து சென்றனராயினும், அரச உதவிகள் இந்தப் பிரதேச மக்களுக்குக் கிடைக்கவில்லை.

1953 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் பிரதேச கடற்தொழிலாளர்களுக்கு இதற்குமுன்னர் வழங்கப்பட்டது போல் படகுகள், இயந்திரங்கள், கடற்தொழில் உபகரணங்கள் மானிய அடிப்படையிலோ, கடன் அடிப்படையிலோ வழங்கப்படவில்லை.

மக்கள் சொந்த முயற்சியின் மூலமும், அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய சுழற்சி அடிப்படையிலான கடன் திட்டத்தின் மூலமும் கடற்தொழில் உபகரணங்களைப் பெற்று, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்தகாலப் போர் நடவடிக்கைகள், கடல் வலயச் சட்டம் என்பன காரணமாக ஆழ்கடல் தொழில் முற்றாகச் செய்ய முடியாத நிலை இருந்தது. அடிக்கடி ஏற்பட்ட இடப்பெயர்வுகளும், கடற்தொழில் பாதிக்கப்படக் காரணமாயிருந்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் மீளக் குடியேறிய மக்கள் மீண்டும் தொழிலை ஆரம்பித்த வேளை - சுனாமி அனர்த்தம் அனைத்தையும் காவுகொண்டு சென்றுள்ளது.

இலங்கையில் எமது பிரதேச கடற்தொழிலாளர்களுக்குத் தேவையான தும்புக்கண்ணாடியிழைப் படகுகளை உடனடியாகத் தயாரிக்க முடியாமை, தேவையான வெளியிணைப்பு இயந்திரங்கள், கடற்தொழில் உபகரணங்களை உடனுக்குடன் இறக்குமதி செய்வதில் நீண்ட நாட்கள் தாமதம் ஆகிய காரணங்களால் மீண்டும் கடற்தொழிலைச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச மக்களுக்கு அரசசார்பற்ற உள்ளூர் - வெளியூர் நிறுவனங்களே குறைந்த அளவிலேயே படகுத் தொகுதிகளை வழங்கியுள்ளன. இதன்மூலம் குறைந்த தொகையினரே தொழிலுக்குச் செல்ல வாய்ப்பு உண்டு.

எமது பிரதேச மக்களின் குறைகளை, தேவைகளைப் புள்ளிவிபரங்களுடன் இந்தப் பிரதேசகடற்தொழில் அலுவலகங்கள் ஊடாக அமைச்சுக்கும், கடற்தொழில் திணைக்களத்துக்கும் பலமுறைகோரிக்கை விடப்பட்டிருந்தும் எந்த உதவியும் கிடைக்காமை குறித்து மக்கள் கவலை தெரிவித்தனர்.

தென்னிலங்கையில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைச்சும், திணைக்களமும் காட்டிய ஆர்வம் அவர்களுக்கு வழங்கிய உதவிகள் வடக்கு - கிழக்குக்கு கிடைக்காததையிட்டு விசனம் தெரிவித்ததுடன், தாம் அமைச்சாலும், திணைக்களத்தாலும் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவே இந்தப் பிரதேச கடற்தொழிலாளர்கள் கருதுகின்றனர்.

(21)

# வடமராட்சி கிழக்கு புனரமைப்புக்கென வரவு- செலவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு

வடமராட்சி

வடமராட்சிகிழக்கு பிரதேசத்தில் பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலகம் மூலமாக, 1.13 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரமாண அடிப்படையிலான வேலைத்திட்ட ஒதுக்கீட்டின் மூலம் 8 லட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபாவிற்கு போக்கறுப்பு - நித்திய வெட்டை வீதி களிமண் ஊரிமூலம் 3 கிலோ மீற்றர் தூரத்துக்கு புதிதாக அமைக்கப்படவிருக்கிறது.

பன்முகப்பட்ட வரவு - செலவுத்திட்ட நிதி மூலம் ஒதுக்கப்பட்ட 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவுக்கு செம்பியன்பற்று உப அலுவலகத்தில் நீர்த்தாங்கி அமைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசபையின் குடத்தனை உப அலுவலகத்தின் பொதுநூல் நிலையத்துக்கு நூல்கள் கொள்வனவு செய்வதற்கென 25 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடமரட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் கே.ரி.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் - பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா, பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் சி.பசுபதி, கிராம அலுவலர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட ஒதுக்கீடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

(21)

# கனகபுரம் விளையாட்டுக் கழகத்தால் கழகங்களுக்கிடையிலான போட்டிகள்

கிளிநொச்சி

கிளிநொச்சி கனகபுரம் விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் சத்தியதர்சன் பூஜிதா ஞாபகார்த்த வலைப்பந்து, உதைபந்து, மென்பந்துப் போட்டிகள் - எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதில் முறைப்படி பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் உரியமுறையில் விண்ணப்பங்களுடன் வீரர்களின் பட்டியல் இணைக்கப்படவேண்டும்.

இதில் வெற்றிபெறும் கழகங்களுக்கு வெற்றிக்கிண்ணங்கள், பரிசில்கள் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக செயலாளர், கனகபுரம் விளையாட்டுக்கழகம், கிளிநொச்சி என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டிசுட்டான் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையினருக்கான சங்கம நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமைகள் தொடர்பாகவும், சமாதான காலத்தில் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை எனவும் ஒட்டிசுட்டான் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரால் முன்வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கடந்த வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.



வவுனியா - ஓமந்தை மத்திய கல்லூரியின் கட்டடத்தொகுதி அண்மையில் புதிதாக திறந்து வைக்கப்பட்டது. இந்த திறப்பு விழா நிகழ்வில் கட்டடத் தொகுதியை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், சிவநாதன் கிஷோர் ஆகியோர் நாடாவை வெட்டி திறந்து வைப்பதை முதலாவது படத்திலும், கணினி அறையை வவுனியா அரசாங்க அதிபர் சி.சண்முகம் நாடாவை வெட்டி திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

- படம் : கனகரவி

# இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

## மே - 31

1662 : முதலாவது டச்சுத் தூதன் - கண்டி அரசனைச் சந்தித்தான்.

1740 : ''மகா பிரடெரிக்'' என அழைக்கப்பட்ட இரண்டாம் பிரடெரிக் ரஷ்யாவின் மன்னராக முடிசூடிக் கொண்டார்.

1825 : நீரில் முழ்கி, ஆழத்தில் ஆய்வு செய்வதற்கு உதவும் "ஸ்க்யூபா" என்னும் முக்குளிப்பு உபகரணத்துக்குப் பிரிட்டனைச் சேர்ந்த வில்லியம்ஸ் ஜேம்ஸ் என்பவர் காப்புரிமம் பெற்றார்.

1859 : உலகெங்கும் பிரபல்யம் பெற்றதான லண்டன் "பிக்பென்" கடிகாரத்தின் மணியோசை லண்டனில் ஒலிக்க ஆரம்பித்தது.

1870 : உலகில் வெள்ளையர் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தப் பாடுபடும் நோக்குடன் அமெரிக்காவில் டென்னஸியில் புலாஸ்க்கி என்னு மிடத்தில் கூ - க்ளாக்ஸ் - க்ளான் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பின் முதலாவது பெரும் தலைவராக ஜெனரல் நாத்தன் பெட்டன் போர்ட் ஃபாரஸ்ட் தெரிவுசெய்யப்பட்டார்.

1875 : பெர்லினில் நடந்த வர்த்தகக் கண்காட்சியில் ஸீமன்ஸ் நிறுவனத்தினரால் முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட பயணிகள் மின்சார ரயில் ஓடவிடப்பட்டது.

1902 : நீச்சல் குளத்துடன் கூடிய முதலாவது கப்பலான எஸ்.எஸ். ஒலிம்பிக் கட்டி முடிக்கப்பட்டு, கப்பல் போக்குவரத்துக் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டது.

✪ கியூபாவிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளது நலனைப் பாதுகாக்கவென அமெரிக்கக் கடற்படையினர் அங்கு சென்று இறங்கினர்.

1917 : முதலாம் உலகப் போருக்குப் பின் ஒஸ்ரியாவின் அரசியல் சட்டம் பொதுமக்களுக்கு உகந்தவகையில் மாற்றியமைக்கப்படும் என்று ஒஸ்ரிய அரசர் சார்ள்ஸ் வாக்குறுதியளித்தார்.

1918 : அமெரிக்கப் பயணிகள் போக்குவரத்துக் கப்பலான ''பிரசிடன்ட் லிங்கன்'' ஜேர்மனிய நீர்மூழ்கிக் கப்பலால் மூழ்கடிக்கப்பட்டது.

✪ முதலாம் உலகப் போரில் இந்த மாதத்தில் மட்டும் நேசப்படைகளது 112 போர்க்கப்பல்களும், ஜேர்மனியினது 14 நீர்மூழ்கிக் கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டிருப்பதாகவும், போர் விமானங்களைப் பொறுத்தவரையில் நேசப்படைகள் 360 விமானங்களையும், ஜேர்மனி 376 விமானங்களையும் இழந்ததாக அறிவிப்பு வெளியானது.

✪ துருக்கியத் தலைநகர் கொன்ஸ்தாந்தி நோபிளில் - பெரும் தீவிபத்து ஏற்பட்டது. 27 மணிநேரம் தொடர்ந்து எரிந்த தீயில் பல லட்சம் துருக்கிய பவுண் பெறுமானமுள்ள சொத்துகள் அழிந்தன.

1924 : ரஷ்யாவை சீனா அங்கீகரித்தது.

1935 : பாகிஸ்தானின் குவட்டாவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கத்தில் முழு நகரமும் தரைமட்டமாகியது. ஆயிரக்கணக்கானோர் பலியாகினர்.

1937 : ஜேர்மனிய கடற்படை ஸ்பெய்னில் அல்மேரியா நகரைக் குண்டுவீசித் தாக்கியழித்தது.

1941 : ஈராக்கிலிருந்து பிரிட்டிஷ் படையினரை விரட்டியடிக்கும் இயக்கத்தின் தலைவரான ரஷீத் அலி ஈரானுக்குள் ஓடிவிட்டதால், ஈராக் பிரிட்டிஸாருடன் போர்நிறுத்தம் செய்வதாக ஒப்புக்கொண்டது.

1942 : 130,000 யூதர்களை நச்சுவாயு மூலமும், சுட்டும் கொன்றொழித்த தாக அறிவிக்கப்பட்டது.

1947 : ஹங்கேரியில் கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளரான பிரதமர் ஃபெரன்ங் நாகி வெளிநாடு சென்றிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த நாட்டு கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்றி, லாஜோஸ்டினிஸ் என்பவரைப் பிரதமராக அறிவித்தனர். தொடர்ந்து கம்யூனிஸ்ட் எதிர்ப்பாளர்களின் களையெடுப்பு ஆரம்பமானது.

1961 : பிரிட்டிஷ் கொமன் வெல்த் அமைப்புடனான உறவுகளைத் தூண்டிக்கொண்டு தென்னாபிரிக்கா குடியரசு நாடானது நிறவெறிக் கொள்கையின் தீவிர ஆதரவாளரான சார்ள்ஸ் ஒஸ்வார்ட் முதலாவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

1962 : லட்சக்கணக்கான யூதர்களது படுகொலைக்குக் காரணமாக இருந்தவரும், நாஜி போர்க் குற்றவாளியுமான அடல்ப் ஹெச்மன் இஸ்ரேலினால் தூக்கிலிடப்பட்டார்.

1976 : சிரியா - லெபனான் மீது படையெடுத்தது.

1981 : இந்தியா ரோகினி - டி என்ற செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது.

1991 : அங்கோலா - உள்நாட்டுப் போரில் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது.

1993 : ஐ.நா.பாதுகாப்புச் சபையின் நிரந்தர பிரதிநிதிகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய ஐந்து நாடுகளும் பேரழிவு ஏற்படுத்த ஆயுத உற்பத்திநுட்பம், மற்றைய நாடுகளுக்குப் பரவுவதைத் தடுப்பதற்காக 10 வழிமுறைகளைக் கடைப் பிடிக்க ஒத்துக்கொண்டன.

✪ உலக புகையிலை மறுப்புதினம்

தொகுப்பு: சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
*கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.*
திருக்குறள்

## நமது நோக்கு

# தேரரின் யுத்தத்திற்கான அறிவுறுத்தல்

'கெடுகுடி சொற்கேளாது' என்பார்கள். அது உண்மை தான். கடந்த மூன்றாண்டுகளுக்கும் அதிககால போர் நிறுத்தத்திற்கும், புரிந்துணர்வு உடன்பாட்டிற்கும், அதன் காரணமாகத் தொடர்ந்துவரும் சமாதானச் சூழலுக்கும் இதுநாள்வரை ஏற்பட்டிராத அச்சுறுத்தலும், ஆபத்தும் அதி கரித்துள்ள கட்டத்தில் - அதனை முற்றாக அழித்து மீண்டும பேரழிவை ஏற்படுத்தும் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்ற அறைகூவலை விடுத்துள்ள ஜாதிக ஹெல உறுமய வின் நாடாளுமன்ற உறுப்பினரும், பௌத்த சிங்கள பேரின வாத சிந்தனையாளருமான அத்துரலிய ரத்னதேரர் அவர் களின் சண்டே லீடர் பத்திரிகைக்கான நேர்காணலை படிக் கும்போது முதலில் குறிப்பிட்ட பழமொழி நினைவுக்கு வரு வது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே உள்ளது.

அத்துரலிய ரத்னதேரர் இப்படித்தான் பேசுவார் என்பது தெரிந்தவிடயம் தான். அவரது பேரினவாத வெறியும் அனை வரும் அறிந்ததுதான். சட்டிக்குள் இருப்பதே அகப்பையில் வந்துள்ளது.

எனினும்கூட மஞ்சள் அங்கி அணிந்து தம்மபதத்தை போதிக்கவேண்டிய - வணக்கத்துக்குரிய ஒருவராக இருக்க வேண்டிய தேரர், யுத்தத்தை போதிக்க - யுத்த அறை கூவலை விடுக்கும் இரத்தவெறிகொண்ட ஒருவராக தன் னைப் பகிரங்கப்படுத்தியுள்ளதை பார்க்கப் பரிதாபமாகவும், அசிங்கமாகவும் இருக்கிறது.

வடக்கு - கிழக்கு சிங்களவர்களின் தாயக பிரதேசம் என்றும் - எனவே, புலிகளை யுத்தத்தால் வென்று அந்தப் பிரதேசங்களை ஜனாதிபதி கைப்பற்றவேண்டும் எனவும் இந்த அத்துரலிய ரத்னதேரர் அந்த ஆங்கிலப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டுள்ளதை பௌத்த சிங்கள மேலாதிக்க மற்றும் ஆக்கிரமிப்பு வாதத்தின் - வெறியின் - ஓங்கி ஒலிக்கும் குரலாகவே கருதவேண்டியுள்ளது.

இந்தக் குரலின் பின்னணியில் இருக்கும் தமிழ் மக்களுக் கும், தமிழ்மண்ணுக்கும் எதிராக சிங்கள இனவாதிகளைக் கிளர்ந்தெழச் செய்து மீண்டும் ஒரு இனக்கலவரத்தை உண்டுபண்ணி அதனை அடுத்த போருக்கான உந்துதள மாக மாற்றமுனையும் மூர்க்கத்தனமான தொனி நிச்சயமாக ஒரு அமைதி வழியை தர்மநோக்குடன் தேடும் புத்த துறவியின் குரலாக இருக்கவேமுடியாது.

கடந்த தசாப்தங்களில் இதேபோன்ற இனவெறி அறை கூவலை விடுத்து இந்த நாட்டின் இனத்துவ ஒருமைப்பாட் டுக்குச் சாவுமணியடித்து போரால் பேரழிவு ஏற்படக் காரண மான - கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜி.சேனநாயக்க, நெவின் பெர்னாண்டோ, சிறில் மத்தியூ, பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜெயவர்த்தன போன்ற தென்பகுதி பேரினவாத அரசியல் வாதிகளின் வழித்தோன்றல்களில் ஒருவரின் குரலாகவே ரத்னதேரரின் குரலை அடையாளப்படுத்தமுடிகிறது.

வடக்கு - கிழக்கு சிங்களவர்களின் தேசம் என்றபின்னர் புலிகளை யுத்தத்தால் வெல்லவேண்டும் என ரத்னதேரர் கூறியிருப்பதன் உட்கருத்து தமிழ்மக்களை முற்றாக அழித்து, அடக்கி அவர்களின் பாரம்பரிய தாயக நிலங்களைக் கைப் பற்றி சிங்களமயமாக்கவேண்டும் என்பதேயாகும்.

தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுவதை- தம்மீதான அடக்குமுறை - ஒடுக்குமுறைகளுக்காக கிளர்ந் தெழுவதை ஆயுதமுனையிலான இராணுவ அராஜகத்தை வேறு வழியின்றி ஆயுதமுனை மூலமே எதிர்க்க நேர்ந்ததை 'பயங்கரவாதம்' என வர்ணிப்பவர்களும், கண்டிப்பவர்களும் ரத்னதேரரின் இந்த இரத்தவெறிகொண்ட யுத்த நிலைப் பாட்டை எந்தப் பட்டியலில் சேர்க்கப்போகிறார்கள்?

அவர் விடுத்துள்ள போருக்கான அறிவுறுத்தலை தமிழ் மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளவேண்டும் என்று கருதுகிறார் கள்?

ஒரு தனி மனிதனின் அர்த்தமற்ற, பைத்தியக்காரத்தன மான புலம்பல்கள்தான் இவை... இவை குறித்து கவலைப் படவேண்டாம் என அரசுப் பொறுப்பிலுள்ளோர் பகிரங்கமாக அறிவித்தால் அது வேறு விடயம்.

ஆனால், அப்படி அவர்களால் அறிவிக்கும் துணிச்சல் உண்டா என்பதே கேள்வியாகும்.

ஹெல உறுமயவினரும், ஜே.வி.பியினரும் அண்மைக் காலங்களில் பேசிவரும் பேச்சுக்களும், விடுத்துவரும் அறிக் கைகளும் ஆட்சித் தலைமையில் உள்ளோரால் வெளிப் படையாக மறுதலிக்கப்படாத - கண்டிக்கப்படாத நிலையில் அவற்றிற்கு அரசின் மௌன அங்கீகாரமும், ஆசீர்வாதமும் இருப்பதாகவே எண்ணத்தோன்றுகிறது.

அந்த வகையில் பார்த்தால் - மீண்டும் ஒரு யுத்தத்திற் கான தீவிரப்படுத்தலை அரச பயங்கரவாத மூலோபாயத் துடன் பேரினவாத ஆக்கிரமிப்பு சக்திகள் தமிழ்மக்களுக் கெதிராக மேற்கொள்ளத் தொடங்கிவிட்டதாகவே கருத முடியும்.

பௌத்த மதபீடத் தலைமைகள் ரத்ன தேரரின் யுத்தத் துக்கான வலியுறுத்தலை ஏற்றுக்கொள்கின்றனவா என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

திருமலை புத்தர்சிலை நிர்மாணிப்பு தொடர்பாகவும் இன்ன மும் பௌத்த மதபீடங்கள் நீதியான நிலைப்பாட்டை எடுக் காத சூழலில், ரத்ன தேரரின் பேச்சுக்கும் அவர்கள் மௌன அங்கீகாரத்தை வழங்கவும் கூடும்.

இந்த நிலையில் சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகம், யுத்தகோஷம்போடும் ஹெல உறுமய பிக்குகளின் நடவடிக்கையால் அமைதிச் சூழலுக்கு ஏற்பட்டுள்ள பேரா பத்தை எப்படித் தடுக்கப்போகின்றது என்பது இன்னொரு முக்கிய வினாவாகும்...!

சமாதானப் புறாவின் இறக்கைகள் நோக்கி பேரினவாதி களின் தாக்குதல் தொடங்கிவிட்டதாகவே கூறவேண்டும்.

## நாடும் நடப்பும்



செய்தி:-வடக்கும் - கிழக்கும் சிங்களவருடையது. புலிகளை யுத்தத்தால் வெல்லவேண்டும்.
- அத்துரலிய ரத்ன தேரர்.

## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# மலேஷியாவின் அடிச்சுவட்டில் ஈழமும் லங்காவும் இணைந்து வாழலாம்!

மலேஷியாவின் முன்னாள் பிரதமர் டொக்ரர் மகதிர் கொழும்புக்கு வந்து சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு இரண்டு தினங்களில் சென்றுவிட்டார். கொழும்பு ஊடகங்கள் மகதிரின் உரைகளை நல்லமுறையில் வெளியிட்டு மலேஷியாவை உருவாக்கிச் செழிப்புறச் செய்த சிற்பி என்று வானளாவப் புகழ்ந்திருக்கின்றன என்று சொல்லிக் கொண்டு வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

முன்பு சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் லீகுவான் யீயும் இங்கு வந்து போயிருக்கிறார். அந்தச் சமயத்திலும் அவரை கொழும்பு ஊடகங்கள் புகழ்ந்து தள்ளின. இங்குள்ள அரசியல் வாதிகளும் பாராட்டி மகிழ்ந்தனர் என்றேன்.

மலேஷியாவில் இஸ்லாமியர்களான மலேயர்களும் இந்துக்களான இந்தியர்களும் பௌத்தர்களான சீனர் களும் சம உரிமையுடன் ஒற்றுமையாக வாழுகிறார்கள். இவர்களின் கடும் உழைப்புத்தான் மலேஷியாவின் வளர்ச்சிக்குக் காரணம். இந்த ஒற்றுமையையும் கடும் உழைப்பையும் மகதிரே சொல்லிக்காட்டியிருக்கிறார் என்றார் பரமசிவம்.

மலாயா, சிங்கப்பூர், புருனை போன்ற நாடுகள் மலே ஷியா என்ற பெயரில் ஒரே நாடாகக் கூட்டாட்சியாக விடுதலை பெற்று ஓரமைப்பில் இணைக்கப்பட்டன. இதில் திருப்தியடையாத புருனை முதலில் இதிலிருந்து விலகிக்கொண்டது. பின்னர் மலாயாவும், சிங்கப்பூரும் இணைந்து ஒரே அரசாக இருந்தன. என்றாலும் இரு தரப்புக்கிடையிலும் கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன. இந்த நிலையில் இந்த இணைப்பு நீடிக்காது, நிலைக்க முடியாதென்பதை இரு தரப்பின் தலைவர்களும் உணர்ந்தனர் என்றேன்.

இரு தரப்பும் நட்புறவுடன் பிரிந்து தனித்தனியாக வாழ்வதற்கு முடிவு செய்தன. மலேஷியா தனிச் சுதந்திர நாடாகவும் சிங்கப்பூர் தனிச் சுதந்திர நாடாகவும் பிரிந்து வாழ்கின்றன. இதனால் இருநாடுகளுக்கிடையில் இன் றும் நட்புறவு நீடித்து நிலைபெற்றிருக்கிறது என்றார் பரமசிவம்.

1970 ஆம் ஆண்டில் இலங்கையில் பொதுத் தேர்தல் முடிந்த சில மாதங்களில் எனது நண்பன் சிறந்த பத்திரி கையாளன் காமினி நவரத்தினா தமது தந்தை, தங்கையுடன் சில நண்பர்களுடனும் யாழ்ப்பாணம் வந் தான். அந்தச் சமயம் கோப்பாய் பிரதிநிதி சி.கதிரவேலுப் பிள்ளை அவர்களைச் சந்திப்பதற்காக காமினியைக் கூட்டிச் சென்றேன். இந்தச் சந்திப்பின்போது தமிழரசுக் கட்சியின் தமிழரசுக் கோரிக்கையைக் குறிப்பிட்டு அந்தக் கோரிக்கை 'பயாப்ரா' வாகுமா (நைஜீரியாவில் தனி நாடு கோரி பயாப்ரா போராடியபோது அது அடக்கி நசுக்கப்பட்டது) பங்களாதேசமாகுமா? (கிழக்குப் பாகிஸ்தான் தனியாகப் பிரிந்துவாழப் போராடி இந்திராவின் உதவியுடன் பங்களாதேசமாக விடுதலை பெற்றது) என்று காமினி கேட்டார். இதற்கு மலேஷி யாவும் சிங்கப்பூரும் போல வாழமுடியும் என்று கதிரவேலுப்பிள்ளை பதிலளித்ததை நான் சொன்னேன்.

மலேஷிய முன்னாள் பிரதமர் மகதிரின் வருகையைப் பற்றிப் பக்கம் பக்கமாக மலேஷியாவின் சிறப்பையும் செழிப்பையும் எழுதும் கொழும்புப் பத்திரிகைகள் மகதிரின் ஒரு துளி சர்வாதிகார நடவடிக்கைகள் பற்றி யும் எழுதுகின்றன. ஆனால், மலேஷியாவில் மலாயா இஸ்லாமியர்கள், சீன பௌத்தர்களும், இந்து இந்தியர் களும் சம உரிமைகளுடன் ஒற்றுமையாக வாழ்வது பற்றி ஒன்றும் எழுதக் காணோமே. இலங்கையை வேறு வழிகளில் ஒப்பிடுகிறர்கள். இது பற்றி ஒன்றும் எழுதவில் லையே என்றார் பரமசிவம்.

இதையெல்லாம் இவர்கள் எப்படி எழுதுவார்கள்? சிறு துவாரம் இருந்தாலும் இனவாதத்தை, இனவெறியை ஊதிப் பெருப்பிக்கலாமென்று காத்திருப்பவர்கள் தானே. இன்று இலங்கை அரசியலுக்கு வழிகாட்டும் ஊடகவியலாளராக இருக்கின்றன. திருக்கோணமலை திடீர் புத்தரைவைத்து திருமலை தமிழர்களுக்கே தொடர்பில்லாதது என்றும் எழுதுபவர்கள் எப்படி இங்கே மூவினங்களும் மலேஷியாபோல் ஒற்றுமையாக வாழ வழிகாட்டுவார்கள்? என்றேன்.

மலேஷியாவில் முன்னர் இங்குபோல் ஆயுதப்புரட்சி முயற்சியும் நடைபெற்றது. இது ஆயுதப்படைகொண்டு அடக்கப்பட்டது. இது மட்டுமல்ல மலேஷியாவிலும் இனக்கலவரம் வெடித்தது. உயிர்ப்பலியும், சொத்தழி வும் ஏற்பட்டது. ஆனால் இந்த இனக்கலகம் ஒரு சில தினங்களுக்குள்ளேயே அடக்கி ஒடுக்கப்பட்டு அமைதி ஏற்படுத்தப்பட்டது. இந்த இனக்கலகம் ஏன்? எப்படி? ஏற்பட்டது. இதற்கான காரணங்கள் என்ன என்பதையும் இனிமேல் இப்படியொரு கலகம் ஏற்படாமற் தடுப் பதற்குரிய வழிகள் என்ன என்பதையும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட் டது. இந்தக் குழுவும் குறுகிய காலத்துக்குள் விசாரணை நடத்தித் தனது சிபார்சுகளையும் தெரிவித்திருந்தது. அதன்பின்பு அங்கே இனக்கலவரங்கள் முதலில் நடந் ததுபோல நடக்கவே இல்லை. சொல்லும்படியாக இந்தக் கலகம் எதுவும் நடந்ததில்லை என்றார் பரமசிவம்.

நாட்டின் அமைதியிலும், வளர்ச்சியிலும் அக்கறை கொண்ட தலைவர்கள் அங்கே அப்படிச் செய்தார்கள். இங்கே 1958ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரத்தைத் தொடர்ந்து இவ்விதம் நடவடிக்கை எடுத்திருந்தால் 1977, 1983 கலகங்களும் தொடர்ந்திருக்கா. இன்று நாட் டின் நிலை இந்த அளவு மோசத்துக்கு வந்திருக்கவும் மாட் டாது என்றேன்.

முதலில் நிலையான ஆட்சியையும், நிம்மதியான ஆட்சியையும், மக்களின் ஒற்றுமையையும் தேடிக்கொண் டால் நாட்டு மக்களும் நிம்மதியாக வாழ்வார்கள், நாடும் முன்னேறும். இப்பொழுதும் கூடக் காலம் கடந்துவிட வில்லை. மலேஷியாவின் செழிப்புக்கு வழிகாட்டிய மக தீரைப் பின்பற்றி மலேஷியாவும், சிங்கப்பூரும்போல சிங் கள ஸ்ரீலங்காவும், தமிழ்பேசும் மக்களின் தமிழீழமும் தனித்தனியாகச் சுதந்திர நாடுகளாக நட்புறவுடன் வாழ வழி காணலாம் என்று சொன்னபடியே நகர்ந்தார் நண்பர் பரமசிவம்.

## வாசகர் நோக்கு...

# நீர்கொழும்பு யேசுநாதர் சொரூபம் வழிகாட்டுகிறது

நீர்கொழும்பில் தெல்வத்தைச் சந்தியில் யேசுநாதர் சொரூ பம் ஒன்று வைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இந்த விவகாரம் நீதி மன்றத்துக்குச் சென்றது. ஆனாலும், கம்பஹா எம்.பி. ஜய லத் ஜயவர்த்தன மற்றும் கத்தோலிக்கப் பிரமுகர்களும் பௌத்த பிரமுகர்களும் கலந்துபேசி இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வுகாணமுயற்சி செய்து அதில் வெற்றியும் பெற்றனர். நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டபோதிலும், நீதிமன்றுக்கு வெளியே இந்தப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பதில் சகல தரப்பினர்களும் பெரும் முயற்சி செய்தனர். இதன் பயனாக வைக்கப்பட்ட யேசுநாதர் சொரூபத்தை இப்போது வைத்த இடத்திலிருந்து வடஎல்லைப் பக்கமாக ஐம்பது அடி தூரத்துக்குத் தள்ளிவைப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. இதற்கு மனுதாரர்கள் ஆட்சேபிக்கவில்லை. நீர்கொழும்பு மாநகர சபையின் அனுமதியுடன் இந்தமுடிவு நீதிமன்றத் துக்கு அறிவிக்கப்பட்டது. சொரூபம் வைக்கும் பீடமும் ஆறு அடி உயரத்துக்கு மேற்படாமலிருக்கும். இதனால் மேரிஸ் ரெல்லா கல்லூரிப்பக்கமாக ஐம்பது அடி தூரத்தில் இந்தச் சொரூபம் இனி நிறுவப்படும்.

பலதரப்பினரும் பல தடவைகள் கூடிப்பேசி விவகாரம் அமைதியைக் குலைக்காமல் நல்ல முடிவுகாணப்பட்டி ருக்கிறது. இங்கும் பௌத்தர்கள்தான் பிரச்சினையைக் கிளப் பினார்கள். சுமுகத்தீர்வுக்கும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இதேபோல் திருமலைபுத்தர் சிலைக்கும் நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று தற்காலிகமாக அதை அகற்றலாம் அல்லது இடமாற்றலாமே!

சாவகச்சேரி செ.குணரத்தினம்.

புகைப்பொருள் எதிர்ப்பு தினம்

செ.குமாரசிங்கம்



# புகைப்பொருள் நமக்கு அத்தியாவசிய தேவைதானா?



இன்று உலக புகைப்பொருள் எதிர்ப்பு தினமாகும். இந்தத் தினத்தை முன்னிட்டு, வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் சில அறிவுறுத்தல்களை மக்கள் முன்வைக்க கடமைப்பட்டுள்ளது. இன்று உலக நாடுகளில் மக்கள் சமுதாயம் என்றுமில்லாதவாறு புகைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிக் கொண்டு வருகிறது.

ஏழை பணக்காரன், சிறுவர், முதியவர், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாமல், எல்லோரையும் இந்தப் புகைப்பழக்கம் விட்டு வைப்பது இல்லை.

உலகளாவிய ரீதியில் புகைத்தல் பழக்கம் மனித வர்க்கத்துக்கு கேடு விளைவிக்கும் காரணியாக இருக்கிறது. இந்தப் பழக்கத்தால் உலகில் ஆண்டு தோறும் 120 கோடிக்கு மேல் புகைக்கு அடிமையாகின்றார்கள். இதனால் ஒரு வருடத்தில் 10 லட்சத்துக்கு மேல் மரணத்தை தழுவிக்கொள்கிறார்கள்.

எமது நாட்டைப் பொறுத்தமட்டில் வருடம் தோறும் 22 ஆயிரத்துக்கு மேல் மரணத்தை தழுவிக்கொள்கிறார்கள். மேலும் இலங்கையில் 12 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் 55 சதவீதத்தினர் புகைப்பழக்கம் உடையவர்கள். புகைத்தல் காரணமாக 50 சதவீதமானவர்கள் இருதய நோயினாலும், 40 சதவீதமானவர்கள் புற்றுநோயினாலும் மரணிக்கிறார்கள். இத்துடன் புகைப்பழக்கம் உடைய ஒருவருக்கு பிறக்கும் குழந்தைக்கு 40 சதவீதம் புற்றுநோய் வர வாய்ப்புண்டு.

ஒரு நாளைக்கு 10 சிகரட்டை புகைப்பவன் - ஒரு நாளைக்கு 11 நிமிட ஆயுளைக் குறைக்கின்றான். இதனால் மற்றையவர்களைவிட 5 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கு முன்பதாகவே மரணத்தைத் தழுவுகின்றான். 60 வயதில் புகைத்தலை கைவிடுபவர்கள் 3 வருடங்கள் மேலதிகமாக வாழக்கூடிய வாய்ப்பையும், 50 வயதில் புகைத்தலைக் கைவிடுபவர்கள் 6 வருடங்களுக்கு மேலதிகமாகவும், 40 வயதில் புகைத்தலைக் கைவிடுபவர்கள் 9 வருடங்களுக்கு மேலாகவும், 30 வயதில் புகைத்தலைக் கைவிட்டால் 10 ஆண்டுகள் மேலதிகமாகவும் வாழ்வதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

மேலும் ஒருவன் புகைக்கும் பொழுது 25 சதவீத புகையில் நிக்கோட்டின் என்னும் நச்சு வெளியேற் தாக்குகின்றது. இதனால் சுகதேகியும் பாதிப்படைகிறான். புகைப்பிடிப்பவரின் வாய் மணத்தல், நாட்பட்ட இருமல், நெஞ்சு வலி, கைவிரல்கள் பழுப்பு நிறமடைதல் என்பன ஏற்படுகின்றன. இதனால் மற்றையோர் இவர்களுடன் நெருங்கிப் பழக விரும்பமாட்டார்கள்.

இன்று புகைப்பவர்களில் 20 சதவீதமானவர்கள் 15-20 வயதுக்கும் இடைப்பட்ட பாடசாலை மாணவர்கள் ஆவர். இன்று இலங்கையில் முன்னைய ஆண்டுகளைவிட, 75 சதவீத பாவனை கூடியுள்ளதாக புள்ளிவிபரம் கூறுகின்றது.

புகைப்பதால் கொலை, கொள்ளை, பாலியல் போன்ற தீய செயல்களைச் செய்ய இது உடலுக்கு உற்சாகமளித்து தூண்டுகிறது.



புகைப்பதால் ஏற்படும் நோய்கள் பற்றி ஆராய்ந்தால், இது உடம்பின் சகல பகுதிகளையும் பாதிக்கிறது. அடிக்கடி வெறும் தேநீருடன் புகைப்பவர்களுக்கு - கால் பாதங்களுக்குச் செல்கின்ற இரத்தச் சுற்றோட்டம் தடைப்படுகிறது. குருதிக் குழாய்களின் உள்சுவர்களை பழுதடையச் செய்து, கல்சிய படிவுகளை ஏற்படுத்தி அடைப்பை ஏற்படுத்துகிறது.

இதனால் மாரடைப்பு பாரிசவாதம், இரத்த அழுத்தம் என்பன ஏற்படும்.

புகைக்காதவரைவிட புகைப்பவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு 70 சதவீதத்தால் அதிகம். கண்பார்வையை இழக்கச் செய்கிறது. பாலியல் உணர்வை மழுங்கடிக்கிறது. நோய் எதிர்ப்பு வலுவைக் குறைத்துவிடுகிறது. உடம்பின் சகல நரம்பு மண்டலங்களையும் பாதிக்கிறது. சுவாச உறுப்புக்களை பாதிப்படையச் செய்து - தொடர்ச்சியான இருமல், அஸ்மாவை ஏற்படுகிறது.

## புகைத்தலை விட சில அறிவுறுத்தல்கள்

1. புகைப்பது இல்லை என உறுதியான முடிவை எடுத்தல்.
2. புகைப்பிடிப்பவரை விட்டு விலகி இருத்தல்.
3. தினமும் இரு தடவைகளில் சுடு நீரில் குளித்துவிட்டு, குளிர்பானங்கள் அருந்துதல்.
4. தினமும் திறந்த வெளியில் உடற்பயிற்சி செய்தல், போஷாக்கான உணவுகளை உண்ணுதல், குறிப்பாக பழவகைகளை உண்ணுதல் ஆகும்.

நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம். எனவே நாம் சுகத்தை அனுபவிக்க வேண்டுமாயின் - புகைத்தலை விட்டால் செல்வம், சிறப்பு, சுகம் உண்டாகும்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகும் சனிபகவான்- தங்களுக்குப் பாத சனியாக சஞ்சரிப்பதால், தொடர்ந்து வந்த சோதனைகள் பெருமளவு குறையும். இது ஏழரைச் சனியின் இறுதிக் காலம்.. எப்படியும் அவர் அனுகூலமான பலன்களைத் தர தவறமாட்டார். மேலும் உங்கள் உடல் ஆரோக்கியமும் முன்னேற்றம் அடையும்.

அதேசமயம் ராகு - கேது சஞ்சாரம் அனுகூலமாக இல்லாததால், தொழிலில் தொய்வு ஏற்படும். மனம் அலைபாயும்.

இதனால் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது, அனுபவஸ்தர்களின் ஆலோசனைகளைப் பின்பற்றவும். மனதில் ஒரு அச்ச உணர்வு தொடர்ந்து கொண்டிருப்பதால், எல்லா முடிவுகளையும் சற்றுக் காலம் தள்ளிப் போட்டு. செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு எடுக்கவும்.

அதோடு கடன் தொல்லைகள் நீடிப்பதால், செலவுகளைக் குறைத்துக் கொண்டு சிக்கனத்தை மேற்கொள்ளவும். பாத சனிக்காலம் என்பதால், கடன்கள் நிச்சயம் குறையத் துவங்கும். மேலும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு ஏற்படப்போகும் குருப்பெயர்ச்சியினால் ஜனன ஜாதகம் வலுத்திருப்பவர்களுக்கு அதிக நற்பயன்கள் ஏற்படும்.

உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரை, மேலதிகாரிகளிடம் நற்பெயர் வாங்க சற்று அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். இருப்பினும் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும் என்பதால், சற்று வேலைப்பளு குறையும். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு வரும் காலகட்டங்களில் உத்தியோகத்தில் நன்மைகள் அதிகரிக்கும். ஆனாலும் சனிக்கிரக சஞ்சாரம் சரியாக இல்லாததால் இடமாற்ற முயற்சிகளை எடுக்காமல் இருப்பது நல்லது.

வியாபாரிகள் போதிய அக்கறை செலுத்தி, வியாபாரம் செய்ய வேண்டியிருக்கும். நண்பர்களை அரவணைத்துச் சென்று காரியங்களைச் சாதித்துக் கொள்ளுங்கள்.

எந்த முடிவுகளையும் கூட்டாளிகளுடன் ஆலோசித்த பின்னரே எடுக்கவும். தற்போது வியாபாரத்தை சிறப்பாக நடத்துவதில் உங்கள் திறமையைக் காட்டுங்கள். மற்றையபடி வெற்றிகள் தாமதமாகத்தான் வரும் என்பதை மனதில் வைத்துக்கொண்டு, திட்டமிட்ட காரியங்களை நன்கு செயற்படுத்துங்கள்.

விவசாயிகளுக்கு விளைச்சல்கள் எதிர்பார்த்த அளவு இருக்காது. அதனால் கடன் வாங்குவதைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். கால்நடைகளும் எதிர்பார்த்த வருமானத்தைத் தராமல் போகலாம். இருப்பினும் செப்ரெம்பர் மாததுக்குப் பிறகு நிலைமைகள் சற்று சீராகும்.

அரசியல்வாதிகளுக்கு சில நேரங்களில் கட்சித் தலைமையின் ஆதரவு கிடைக்கும். ஆனால் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டு செயல்திட்டங்களை அவர்களிடம் கொண்டு செல்வது பயனளிக்காது.

மேலும் உங்கள் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். எதிரிகளின் ரகசியத் திட்டங்களை நீங்கள் அறிந்து கொள்வதில் கால தாமதம் ஏற்படும். இதனால் சில இடையூறுகளுக்கு ஆளாவீர்கள். பிறருக்கு வாக்குறுதி, முன் பிணை ஏதும் கொடுக்காதீர்கள். அது ஏதாவதொரு பிரச்சினையில் உங்களை மாட்டிவிடும்.

கலைத்துறையினருக்கு இந்த 2 ஆம் இடத்துச் சனிக்கிரகப் பெயர்ச்சி சற்று ஆறுதலைக் கொடுத்தாலும், தொடர்ந்து கடினமாக உழைக்க வேண்டியிருக்கும். அதேசமயம் உங்களின் தேக ஆரோக்கியம் சீர்படும். நடையிலும் மிடுக்கு கூடும். பொதுவாக இந்த சனிப்பெயர்ச்சி காலத்தில் முன்னேற்றம் சற்று மந்தமாகவே இருக்கும். அதேநேரம் தசாபுத்திகள் சாதகமாக இருப்பவர்கள் சற்று அதிக பலன்களைப் பெறுவர்.

பெண்மணிகள் குடும்பத்துக்காக விட்டுக் கொடுத்து, மற்றையவர்களை அரவணைத்துச் செல்லவும். குடும்ப விடயங்களில் யோசித்து செயற்படவும். பிறரோடு வாக்குவாதங்களில் ஈடுபட வேண்டாம். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து, சிக்கனமாக வாழ முயற்சி செய்யுங்கள். வேலைக்குச் செல்லும் பெண்கள் மேலதிகாரிகளின் கடுஞ்சொற்களுக்கு ஆளாக நேரிடலாம் . அதனால் கோள் மூட்டும் ஊழியர்களிடம் கவனமாக நடந்து கொள்ளவும்.

மாணவமணிகள் கல்வியில் அதிக அக்கறை செலுத்தவும். எந்தப் பாடத்தையும் பலமுறை படித்து, மனப்பாடம் செய்து, எழுதிப் பார்ப்பது நல்லது. தசாபுத்தி நன்றாக உள்ள மாணவர்கள் சற்று அதிக முயற்சி செய்தால் சிறந்த வெற்றிகளைப் பெறலாம்.

விளையாட்டுக்களில் ஈடுபடும் போது கவனத்துடன் இருக்கவும். உடல் நலனில் அக்கறை செலுத்தவும். ஜல தோஷம், சளி போன்ற தொந்தரவுகளுக்கு ஆளாக வாய்ப்பு உள்ளதால், ஐஸ்கிரீம் போன்ற குளிர்ச்சியான பொருட்கள் சாப்பிடுவதைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

**பரிகாரம் :-** சிவன் கோயிலில் உள்ள சனீஸ்வரனை கோயிலுக்குச் செல்லும் போதெல்லாம் தீபமேற்றி வழிபடவும். காலையில் காக்கைக்கு எள்ளு கலந்த சாதத்தை வைத்து வரவும். ☆

# ஈராக்கில் காயமடைந்த அல்சர்காவி

# ஈரானுக்குத் தப்பியோடிவிட்டாராம்!

## லண்டன் சண்டேரைம்ஸ் தகவல்



பாக்தாத் —

ஈராக் கிளர்ச்சிவாத தலைவர் அல் சர்காவி ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்துள்ளதால் ஈராக்கை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க இராணுவத்துக்கு எதிராக ஈராக்கில் கிளர்ச்சிவாத தாக்குதல்களை நடத்தி வரும் சர்காவியை உயிருடனோ, பிணமாகவோ பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 315 கோடி ரூபா பரிசு வழங்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. அவரைக் கொல்வதற்காக அவர் தங்கியிருக்கும் இடங்களின் மீது எல்லாம் அமெரிக்க ராணுவம் தாக்குதல் நடத்தி வந்தது.

இந்தத் தாக்குதல்களில் தப்பித்து வந்த சர்காவி 3 வாரங்களுக்கு முன்பு நடந்த அமெரிக்கப் படையினரின் ஏவுகணைத் தாக்குதலில் காயமடைந்தார்.

ஈராக்கில் அல்காய்ம் என்ற நகரின் அருகே சர்காவி ஒரு காரில் சென்றபோது அமெரிக்க ஏவுகணை அவரைத் தாக்கியது.

வலது தோளுக்கும், நெஞ்சுக்கும் இடையே ஏவுகணைத் துகள் பாய்ந்தது. அது அங்கேயே தங்கிவிட்டது. மற்றொரு துகள், சர்காவியின் மார்பைத் துளைத்து முதுகு வழியாக வெளியே வந்தது.

சர்காவி காயமடைந்ததும் அவரது வாகனத்தில் இருந்த ஆதரவாளர்கள் அவரைத் தூக்கிச் சென்று மறைவிடத்தில் வைத்து அவருக்கு முதலுதவிச் சிகிச்சையளித்தனர்.

4 நாட்களுக்குப் பின்னர் காய்ச்சல் ஏற்பட்டதால் ரமாடி நகரிலுள்ள ஒரு வைத்தியசாலையில் அவர் சேர்க்கப் பட்டார். அங்கு வைத்தியர்கள் சிகிச்சையளித்ததும் அன்றைய தினமே அவரது ஆதரவாளர்கள் அவரை அழைத்துச் சென்று விட்டனர்.

ஏவுகணைத் துகள்களை உடலிலிருந்து வெளியே எடுப்பதற்காக அவருக்கு சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். அதை ஈராக்கில் வைத்துச் செய்தால் அமெரிக்க ராணுவம் பிடித்துவிடும் என்பதால் அவர் வேறு நாட்டுக்குத் தப்பிச்சென்றுவிட்டார்.

இவ்வாறு தப்பிச்சென்ற அவர் ஈரான் நாட்டுக்குச் சென்றுவிட்டார் என்று லண்டனில் இருந்து வெளியாகும் சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, எங்கள் தலைவர் நல்ல ஆரோக்கியத்துடன்தான் இருந்து வருகிறார். அவர்தான் அமெரிக்க ராணுவத்துக்கு எதிரான புனிதப்போரை நடத்தி வருகிறார். தாக்குதல் நடவடிக்கைகளை இந்த நிமிடம் வரை அவர்தான் மேற்பார்வையிடுகிறார் என்று சர்காவியின் ஆதரவாளர்கள் கூறியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அல்கொய்டா வெளியிட்ட அறிக்கையில் –

கடவுளின் பாதையில் நடை போட்டுவரும் நேரத்தில் சர்காவி காயமடைந்தார். அவர் குணமடைய கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

எங்கே எப்போது சர்காவி காயமடைந்தார் என்பது அல்கொய்டா அறிக்கையில் கூறப்படவில்லை.

கடந்த வியாழக்கிழமை அல்கொய்டா இணையத்தள அறிக்கையில் சர்காவி செய்துவந்த பணிகளைக் கவனிப்பதற்குப் புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருந்தது. எனினும் பின்னர் அந்த அறிக்கை மறுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச நாடுகள் தனது விடுதலைக்கு உதவவேண்டுமென்கிறார் தாரிக் அசீஸ்



பாக்தாத் —

சதாம், ஈராக்கை ஆட்சி செய்தபோது துணைப்பிரதமராக இருந்த தாரிக் அசீஸ் கைதாகி சிறையிலடைக்கப்பட்டுள்ளார். அவர் கைப்பட எழுதி இருக்கும் கடிதத்தில் – நான் ஒரு அப்பாவி. என் விடுதலைக்கு சர்வதேச நாடுகள் உதவவேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

சதாம் ஆட்சி கவிழ்ந்த பிறகு 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அசீஸ் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டார். தற்போது பாக்தாத் அருகே கிராப்பர் முகாமில் இவர் சிறைவைக்கப்பட்டுள்ளார். சதாம் மீதும் தாரிக் அசீஸ் உட்பட 11 பேர் மீதும் போர்க்காலக் குற்றங்களுக்காகவும் அத்துமீறல்களுக்காகவும் வழக்குத்தொடரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறையிலிருக்கும் தாரீக் அசீஸ் தன் கைப்பட எழுதியுள்ள கடிதத்தில் மேலும் கூறியிருப்பதாவது –

நான் ஒரு அப்பாவி. சட்டத்துக்கு புறம்பாக நான் கைது செய்யப்பட்டுள்ளேன். அநீதியாக என் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய திகதிவரை முறையான விசாரணைகள் தொடங்கவில்லை.

என்னுடைய கஷ்ட நிலையை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச நாடுகள் உதவவேண்டும்.

சர்வதேச சட்டத்துக்கும், ஜெனீவா தீர்மானத்துக்கும், ஈராக் சட்டத்துக்கும் முரணாக நான் கைது செய்யப்பட்டிருக்கிறேன். எனவே, உலக நாடு கள் தலையிடுவது தவிர்க்க முடியாதது ஆகும். இவ்வாறு ஒரு கடிதத்தில் தாரீக் அசீஸ் கூறியுள்ளார்.

மற்றொரு கடிதத்தில், நானும் எனது சகாக்களும் வெளியுலகத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் குடும்பத்தினர் அனுப்பும் கடிதங்களையும், பார்சல்களையும் நாங்கள் பார்ப்பதற்கு அனுமதிக்கப்படுவது இல்லை என்றும் கூறியிருக்கிறார். சட்டத்தரணி டயரியில் இந்தக் கடிதங்களை அவர் எழுதியிருக்கிறார். இந்தக் கடிதங்கள் ஆங்கிலத்திலும் அரபு மொழியிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

# காஸா அகதிகள் முகாம்மீது இஸ்ரேல் திடீர் ஏவுகணை வீச்சு!

டெல்அவிவ் —

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன நாடுகளுக்கிடையே அடிக்கடி மோதல் நடந்து வருகிறது. பலஸ்தீனத்தின் பெரும் பகுதியை இஸ்ரேல் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இரு நாடுகளுக்கிடையே அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டு இருக்கிறது. இதையடுத்து கடந்த சில வாரங்களாக எல்லையில் எந்தவித மோதலும் இல்லாமல் இருந்தது.

இந்த நிலையில் எவ்வித முன்னறிவிப்பும் இல்லாமல் பலஸ்தீன நாட்டில், காஸா நகரின் வடக்குப் பகுதியிலுள்ள ஜபாலியாஅகதிகள் முகாம் மீது இஸ்ரேல் விமானப்படை விமானம் ஏவுகணைகளை வீசி அதிரடித் தாக்குதல் நடத்தியது.

மொத்தம் மூன்று ஏவுகணைகள் வீசப்பட்டன. இதில் முகாம் தீப்பற்றி எரிந்தது. 2 பேர் பலியானதாக தகவல்கள் கூறுகின்றன. தொடர்ந்து காஸா நகரை சுற்றிக் கடற்படை மற்றும் இராணுவத்தை இஸ்ரேல் நிறுத்தியுள்ளது. காஸா நகரில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகளைத் தாக்கப் போவதாக இஸ்ரேல் அறிவித்திருக்கிறது. இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே அமெரிக்கா மேற்கொண்ட சமாதான நடவடிக்கையின் அடிப்படையில் இஸ்ரேல் சிறையிலுள்ள பலஸ்தீனர்களில் 400 கைதிகளை விடுதலை செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக இஸ்ரேல் அமைச்சரவைக் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதற்கு 18:3 என்ற கணக்கில் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல் 30 பேர் பலி; 96 பேர் படுகாயம்!



பாக்தாத் —

ஷியா முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கில்லா நகரில், இரு வேறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் சுமார் 30 பேர் கொல்லப்பட்டனர்.

புதிதாக இராணுவத்தில் சேர்பவர்கள், வைத்திய பரிசோதனைக்காக ஒரு வைத்தியசாலையின் முன்புறமாக இருந்தவேளை, தற்கொலைக் குண்டுதாரியொருவர் தனது குண்டை வெடிக்கவைத்தார்.


தமது படையணியைக் கலைப்பதற்கு எடுத்த தீர்மானத்திற்கு எதிராகப் பொலிஸார் கூட்டம் ஒன்று எதிர்ப்புத் தெரிவித்தபோது, அவர்களிடையே தனது குண்டை இரண்டாவது தற்கொலைக் குண்டுதாரி வெடிக்கவைத்தார்.

ஆகக் குறைந்தது 96 பேர் இந்தத் தாக்குதல்களில் காயமடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் நடைபெற்ற இடம், இரத்தத்தாலும், சதைத் துண்டுகள், ஆடைத் துண்டுகள், சப்பாத்துக்கள் என்பவற்றாலும் நிறைந்து காணப்பட்டது.

இதனிடையே சுனி முஸ்லிம் உயர் அரசியல்வாதியொருவர் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் பிரதான சுனி முஸ்லிம் கட்சியினுள் ஒன்றான இஸ்லாமியக் கட்சி – அதிகாலையில் அதன் தலைவரான மோசென் அப்துல் ஹமீட், அவரது மூன்று மகன்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.



கடந்த ஜனவரியில் ஈராக்கில் நடந்த தேர்தல்களைப் பகிஷ்கரித்த கட்சிகளுள் இந்தக் கட்சியும் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனின் பழமைவாய்ந்த

# பிக்பென் கடிகாரம் திடீரென ஓடாமல் நின்று போனது!

லண்டனில் 'வெஸ்ட் மினிஸ்டர்' அரண்மனையில் 147 ஆண்டுகளாக உள்ளது பிக்பென் கடிகாரம். உலகிலேயே அதிகளவு நம்பகத்தன்மை கொண்ட இந்தக் கடிகாரம் கடந்த சனிக்கிழமை இரவு 10.07 மணிக்கு நின்று போனது.


சிறிது நேரத்துக்குப் பின்னர் நிமிட முள் மெதுவாக ஓடத்தொடங்கியது. இரவு 10.20மணிக்கு அது மீண்டும் நின்றுபோனது. பின்னர் அது 90 நிமிடம் ஓடவில்லை. கடிகாரம் பழுது பார்ப்பவர்கள் அதைச் சரிசெய்த பிறகு மீண்டும் ஓடத்தொடங்கியது.

லண்டனில் கடந்த சனிக்கிழமை 90 டிகிரியில் வெயில் கொழுத்தியது. 1953 ஆம் ஆண்டுக்குப் பிறகு மிக வெப்பமான நாள், கடந்த சனிக்கிழமை தான் என்று அறிவிக்கப்பட்டது. இந்த வெப்பம் காரணமாகத்தான் இது பழுதானது என்று கூறப்படுகிறது.

2 ஆம் உலகப் போரின்போது பல தாக்குதல்களைச் சந்தித்தபோதெல்லாம் நிற்காத இந்தக் கடிகாரம் கடந்த காலத்தில் மூன்றுமுறை நின்று போனது. 1962 ஆம் ஆண்டு பனி கொட்டியதால் 10 நிமிடம் தாமதமாக ஓடியது. 1986 ஆம்ஆண்டு அது நின்றுபோனது.

1997ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி பொதுத் தேர்தலுக்கு 24 மணி நேரத்துக்கு முன்பு இது நின்று போனது. இந்தக்கடிகாரம் உள்ள கோதிக் கோபுரம் 315 அடி உயரமுள்ளது. இது 1858 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

# விஜயகாந் தனது அரசியல் பிரவேசத்தை நாளை அதிகாரபூர்வமாக அறிவிப்பார்!



சென்னை —

நடிகர் விஜயகாந் அரசியலில் குதிக்கும் வகையில் ரசிகர் மன்ற முன்னணி நிர்வாகிகளுடன் கடந்த சில நாட்களாக ஆலோசனை நடத்தினார். புதிய கட்சியின் பெயர், கொடி போன்றவை குறித்துக் கருத்துக் கேட்டார். மாநிலம் முழுவதும் தனக்குள்ள செல்வாக்குப் பற்றி ரகசிய கருத்துக் கணிப்பும் நடத்தினார்.

இதனையடுத்து அரசியல் பிரவேசத்தை நாளை ஆண்டாள் அழகர் திருமண மண்டபத்தில், நிருபர்களை அழைத்து அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார்.

மதுரையில் செப்ரெம்பர் மாதம் ரசிகர் மன்றம் சார்பில் அரசியல் மாநாடு நடக்கவுள்ளது. மாநாட்டு திகதியையும் அப்போது அறிவிப்பார்.

தமிழ் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழர் திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. இவற்றில் ஏதேனும் ஒரு பெயரை புதுக்கட்சிக்குச் சூட்டுவார்.

கட்சிக்குப் புதிய கொடி தயாராகி விட்டது. கறுப்பு, சிவப்பு நிறத்தில் நடுவில் ஜோதியுடன் கொடி அமைகிறது. லட்சக்கணக்கில் இந்தக் கொடிகள் தயாராகி வருகின்றன.

மதுரை அரசியல் மாநாட்டுக்குத் திரண்டு வாரீர் என்று சுவரொட்டிகள் அச்சிடப்பட்டுள்ளன.

இளைஞர் அணி, தொண்டர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, தொழிலாளர் அணி, சட்டத்தரணி அணி, மருத்துவர் அணி போன்றவை உருவாக்கப்பட்டு அவற்றுக்கு நிர்வாகிகள் நியமனம் நடைபெற்றுவந்தன. அந்தப் பணிகள் தற்போது முடிவடைந்துவிட்டன.

விஜயகாந் கட்சியுடன் கூட்டணி அமைக்க பாரதீய ஜனதா விரும்புகிறது. ஆனால் சட்டமன்றத் தேர்தலில் விஜயகாந் தனித்துநிற்க விரும்புவதாக ரசிகர் மன்ற நிர்வாகியொருவர் கூறினார்.

விஜயகாந் மதுரையில் போட்டியிடுகிறார். அந்தத் தொகுதியில் தேர்தல் பணிகளை ரசிகர்கள் இப்போதே தொடங்கிவிட்டனர்.

தமிழ்நாடு முழுவதும் ஏற்கனவே சுற்றுப்பயணம் செய்து ரசிகர்களையும் பொது மக்களையும் விஜயகாந் சந்தித்தார். அப்போது மக்கள் நலனுக்காக பல்வேறு புதிய திட்டங்களை தயாரித்து வைத்திருப்பதாகக் கூறினார். அந்தத் திட்டங்களை மதுரை மாநாட்டில் அறிவிக்கவுள்ளார்.

புதுக் கட்சிக்கு நிர்வாகிகளாக தற்போது ரசிகர் மன்றப் பொறுப்பில் உள்ளவர்களே நீடிப்பார்கள்.

பொதுமக்களைக் கவர ரசிகர் மன்றம் சார்பில் மாவட்டம் தோறும் இலவச மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகிறது. மாநாட்டுக்கு முன்னதாக அனைத்துப் பகுதிகளிலும் இந்த முகாம்களை நடத்தி முடிக்க வேண்டும் என்று ரசிகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கட்சியில் நடிக நடிகைகளைச் சேர்க்க முயற்சி நடந்துவருகிறது. சில நடிக, நடிகைகளுடன் இரகசிய பேச்சு நடந்து வருகிறது. கட்சியில் சேரும் நடிக, நடிகைகள் மதுரை மாநாட்டு மேடையில் தோன்றுவார்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# வடிசாலை ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

தமது கோரிக்கைகள் தொடர்பாக நிர்வாகத்தினர் தொழிற்சாலைக்கு வந்து பேச்சுவார்த்தை நடத்தினால் மட்டுமே அந்தப் பேச்சுவார்த்தையில் தாம் கலந்துகொள்ளமுடியும் என வடிசாலையின் ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

அதிகரித்தசம்பள உயர்வை வழங்கக்கோரி கடந்த நான்கு தினங்களாக திக்கம் வடிசாலை ஊழியர்கள் நடத்தி வரும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக வடிசாலை ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் - பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் பிரதநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று சமாசப் பணிமனையில் நடைபெற அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்த அழைப்பு தொடர்பாக வடிசாலை ஊழியர் தொழிற்சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த நான்கு தினங்களாக சம்பள அதிகரிப்புக்கோரி தாம் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு பனை - தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிர்வாகத்தினரோ, பொது முகாமையாளரோ நேரில் வந்து பார்வையிடவில்லை.

எனினும் தமது சங்கத்தின் தீர்மானத்தின்படி எந்தப் பேச்சுவார்த்தையென்றாலும் தொழிற்சாலை வளாகத்திலேயே நடத்தப்படவேண்டும் என்ற தொழிற்சங்க தீர்மானத்தின் அடிப்படையிலேயே நேற்றைய கூட்டத்தில் தாம் கலந்துகொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கை தொடர்பாக தொழிற்சாலையில் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாணப்படும் வரை - வேலைநிறுத்தம் தொடரும் என ஊழியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

# வவுனியா வளாக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதிக்கின்றனர்

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் மீண்டும் இன்று முதல் காலவரையறையின்றி பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கடந்தவருடம் மாணவர்கள் நடத்திய தமது போராட்டத்தில் -பம்பைமடுவில் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான கட்டட வசதிகளை ஏற்படுத்தல், இரண்டு பீடங்களுக்கும் தேவையான சிற்றுண்டிச் சாலைகளை அமைத்தல், மாணவர் பொது மண்டபம் அமைத்தல், விளையாட்டு உபகரணங்களை உரியமுறையில் வைத்துப் பராமரிக்க அறை ஒன்று அமைக்கப்படவேண்டும், மாணவர் போக்குவரத்துக்கு பஸ் ஒன்றை வாங்குதல், நிரந்தரமான விளையாட்டுப் பயிற்சியாளரை நியமித்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதில் இரண்டு விடயங்களே தற்போது நிர்வாகத்தால் தீர்க்கப்பட்டுள்ளன. இதில் மாணவர் விடுதிக்கான மாதாந்த வாடகை சிறியளவில் குறைக்கப்பட்டுள்ளது. மற்றையது இரண்டு சிற்றுண்டிச்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் திருப்தியாக அவை அமையவில்லை.

எனவே தமது இந்தக் கோரிக்கைகளை கவனத்திலெடுத்து அவை செயற்படுத்தப்படும்வரை இன்று முதல் காலவரையின்றி வகுப்புக்களை பகிஷ்கரித்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

## அடுத்த...

டிக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் - அதற்கு நேரடியாக முகம்கொடுத்து சவால் விடுக்க வேண்டியிருப்பதனால் ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதி தேர்தலில் உறுதியாக போட்டியிடவுள்ளது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு -கிழக்குப் பிரதேசங்களைக் கட்டியெழுப்ப ஜனநாயகமற்ற ஒரு அமைப்புக்கு நிதி வழங்கவிருக்கும் நிலையில் உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் வைத்து ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வெளிநாட்டவர்கள் மத்தியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார். ஹெல உறுமயவைத் தவிர அந்தக் காரியத்தை செய்வதற்கு எவரும் முன்வரவில்லை.

தேசிய ரீதியான கடமையையே தான் நிறைவேற்றியதாகவும், சொற்ப பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக அனைத்து விடயங்களையும் மறைத்து மக்களின் உரிமைகளைக் காட்டிக்கொடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்மையினாலேயே அவர் அவ்வாறு செய்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

## யார்...

எனவே அதன்மூலம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. இந்த நிலையில் ஜே.வி.பி ஒருபோதும் அதனை அனுமதிக்கப்போவதில்லை வடக்கு - கிழக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களை புனரமைப்பதற்கு ஜனாதிபதியிடம் யோசனை ஒன்றை ஜே.வி.பி முன்வைத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)

## ஜே.வி.பியின்...

ஆனால், இரண்டாவது பொதுக் கட்டமைப்பை ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளாது. அதன் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டணியை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து ஜே.வி.பி. தீர்மானிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அம்பாறை...

யான முகமட் பௌசன் தனது நண்பருடன் அட்டாளைச்சேனையிலுள்ள காதலியின் வீட்டுக்கு குருநாகலில் இருந்து அம்பாறை - கல்முனை வீதியூடாக வாகனத்தில் சென்றுகொண்டிருந்த சமயம் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தின்போது வாகனம் மரமொன்றுடன் மோதியதில் அதில் பயணம் செய்த அவரது நண்பரான மொகமட் பவாஸ் என்பவர் காயங்களுக்குள்ளாகி சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வாகனத்தைச் செலுத்திச்சென்ற மொகமட் பௌசனின் கழுத்தில் துப்பாக்கி ரவைகள் பாய்ந்துள்ளன. ரி-56 ரக துப்பாக்கியே இவர் மீதான தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புடைய நபர்களோ, கொலைக்கான காரணங்களோ இதுவரை கண்டறியப்படவில்லையென சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## கொச்சி...

பாதுகாப்பு வழங்கிவரும் விமான நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் முதல் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

விமான நிலையத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கண்காணிப்புத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. பல்வேறு கட்டச் சோதனைகளின் பின்னரே பயணிகள் உள்நுழைய அனுமதிக்கப்படுகின்றனர்.

அடுத்த மாதம் 7 ஆம் திகதி வரை இந்தப் பாதுகாப்பு நடைமுறை அமுலில் இருக்கும் என்றும் இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். செயலகக் கூட்டத்தில்

# அரசசார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைக்குமாறு வலியுறுத்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்கள் அனைத்தும் அரச அதிபர் ஊடாக ஒருங்கிணைத்து செயற்படுத்தப்படவேண்டுமென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தலைமையில் யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்கள் ஒன்றிணைத்துச் செயற்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறான அமைப்புக்கள் தங்கள் செயற்திட்டங்களை மேற்கொள்ளும்போது சில குறைபாடுகள் ஏற்படுகின்றன. அளவுக்கதிகமான செலவுகள் ஏற்படுகின்றன.

எனவே அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்திட்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து அரச அதிபர் மூலமாக மேற்கொள்வதன் மூலம் யாழ். குடாநாட்டில் தற்போதுள்ளதைவிட சிறந்த செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதைவிட, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் 50 லட்சம் ரூபாவைக் கொண்டு யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய குடிநீர் விநியோகம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சிறுவீதி போன்றவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்ப கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை யூன் மாதம் திகதி முதல் ஒவ்வொரு தினை தலைவர்களுடனான கல யாடல் நடைபெறவுள்ள வாறான கூட்டங்க முறை கூட்டுவதெ கூட்டத்தில் தீர்மானிக்கப

இந்தக் கூட்டத்தி யாழ். அரசாங்க அதிபர் கே. நொச்சி மாவட்ட அரசாங்க இராசநாயகம், நாடாளு பினர்களான பத்மினி சி மா.கா.ஈழவேந்தன், சி சிவநேசன், சுரேஸ் மற்றும் விடுதலை பு நிதிகள் எனப்பலர் கலந்துகொண்

# வாகரையில் இன்று கண்டனப் பேரணி!

மட்டக்களப்பு - வாகரைப் பிரதேசத்தில் இன்று எதிர்ப்புப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு இராணுவத் தரப்பினர் தடைவிதித்துள்ளதை எதிர்த்தே இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

வாகரையிலிருந்து மாங்கேணி வரையும் கண்டனப் பேரணி நடத்தும் மக்கள், மறியல் போராட்டத்தையும் நடத்தவுள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மாங்கேணி இராணுவ முகாமுக்குச் சென்று அங்கு இராணுவ அதிகாரியிடம் மகஜர் கையளிப்பதுடன் - ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கும் மகஜர்கள் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

## புத்தர்...

அழைப்பின் பேரில் திருகோணமலை நகரசபையின் விசேட ஆணையாளர் சுந்தரம் அருமைநாயகம், செயலாளர் விபுலானந்தன் ஆகியோர் கொழும்பு சென்றுள்ளனர்.

சட்டமா அதிபருடனான சந்திப்பை முடித்துக்கொண்டு நேற்றுமாலை திருகோணமலைக்குத் திரும்பிய இவர்கள் இன்று நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை - எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் புத்தர்சிலை அகற்றப்படாவிட்டால் மூன்றாம் திகதி முதல் தொடர்ச்சியான ஹர்த்தால் நடத்தப் போவதாக தமிழ்மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

## பாடசாலை...

அதிபர் அலுவலகத்தை மூடிவிட்டு ஒளித்துக்கொண்டதை அடுத்து பாடசாலை வாயிலில் மக்கள் காத்திருந்தனர்.

இதற்கிடையில் சம்பவ இடத்துக்குச் சென்ற கலாசாரத்தைப் பேணும் குழுவினர் மக்களை சமரசப்படுத்திவிட்டு அலுவலகத்திலிருந்த அதிபரை விசாரணைக்குட்படுத்தினர். (14)

SPOKEN ENGLISH
WITH
GRAMMAR
LECTURES BY:
MR.M.A.HARI
புதிய பிரிவுகள் ஆரம்பம்
02.06.2005 வியாழன்
மாலை 5.00 மணி
Tuesday
Thursday } 5 P.M - 6 P.M
HARI'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம்.

# இரு வேறு விபத்துக்களி 8 பேர் காயமடைந்தனர்

கைதடி பாலத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில் லொறியொன்றும் மினிபஸ்ஸும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் சாரதி உட்பட ஏழு பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கே.செல்வராஜா (வயது 58), தர்சினி (வயது 20), கிளிசெல்வம் (வயது 25), நிக்லஸ் (வயது 20),ஆர்.பிரியதர்சினி (வயது 18), கே.யோகராசம் (வயது 18), த.பிரகாஷ் (வயது 20) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

யாழ்ப்பாணத்தில் இருந்து முகமாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறியும், வன்னியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ்ஸும் கைதடி தருகே மோதிக்கொண்டதால் விபத்து ஏற்பட்டது.

இதேவேளை, ஆனைக் டைப் பகுதியில் நேற்றுக்காலை மணியளவில் கன்ரர் வாகல சைக்கிளும் விபத்துக்குள்ளா சைக்கிளில் சென்றவர் படுகா டைந்து யாழ். போதனா வைத் சாலையில் அனுமதிக்கப்பட்டுள்

இந்தச் சம்பவத்தில் ஆ கோட்டையைச் சேர்ந்த கந் தெய்வேந்திரம் (வயது 44) வரே காயமடைந்தவராவார்.

வீட்டிலிருந்து வேலைக்குச் கொண்டிருந்தவரே கன்ரர் வா மோதியதில் படுகாயமடைந்துள் இது தொடர்பாக மானிப்பாய் ஸார் விசாரணைகளை கொண்டு வருகின்றனர்.

## பாதுகாப்பு வலயங்களை...

இதேவேளை, விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கத்தால் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் - இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் எழக்கூடிய பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை பொறுப்பாக நியமிக்க அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக அரசாங்க சமாதானச் செயலகம் தெரிவித்தது.

இது தொடர்பாக அரசாங்கத்தின் சமாதானச் செயலக வட்டாரங்களில் இருந்து மேலும் தெரியவருவதாவது-

விடுதலைப் புலிகளும் அரசாங்கத்தின் இந்தத் திட்டத்துக்கு தங்களின் சம்மதத்தை வழங்கியிருக்கின்றனர். அத்துடன் பொதுக் கட்டமைப்பைக் கண்காணிக்கும் பொறுப்பையும் அந்த அமைச்சரிடம் கையளிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுக் கட்டமைப்பு குறித்து வாய்மூலம் பதிலை எதிர்பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்படும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கும் பொறுப்பு சிரேஷ்ட அமைச்சருக்கு வழ படும் எனவும் தெரிவிக்கப்படுகி

இதேவேளை, இந்தப் பத யாரை நியமிப்பதென இது முடிவுசெய்யப்படவில்லை கூறப்படுகிறது. எதிர்வரும் நாட் ஜனாதிபதி அனைத்துக் கட்சி னும் பேச்சுவார்த்தை நடத்தி அ சர் ஒருவரை இந்தப் பத நியமிப்பாரெனத் தெரியவருகிற

பொதுக்கட்டமைப்பு குறித்து யல் கட்சிகள் முன்வைக்கும் யோசனைகளை - விடுதலை ளுடன் ஏற்படுத்தப்படவிருக்கும் படிக்கையில் சேர்த்துக்கொள் அவகாசம் இல்லாததால் வொரு அரசியல் கட்சிகளும் மாறி சமர்ப்பிக்கும் யோச ளுக்கு அமைய பொதுக் கட்ட தொடர்பான ஆவணங்களில் கடி மாற்றங்களை மேற்கொ விடுதலைப் புலிகள் இணங் யாலும் அரசாங்கம் இந்த மு எடுத்திருப்பதாகத் தெரியவரு

# மரண அறிவித்தல்

## கதிரவேலு சுப்பிரமணிய

இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த கதிரவே பிரமணியம் அவர்கள் 30.05.2005 நேற்று திங்கட்கிழமை மானார்.

அன்னார் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சரஸ்வ அன்புச் சகோதரனும், ஜெயலக்ஷ்மி, யோகராணி, காலஞ் தனலக்ஷ்மி, கனகாம்பிகை, கமலாம்பிகை, கதிரவேலு (பிரா கௌரிமலர் (கொலன்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சென்ற அருட்செல்வம், பாலசுந்தரம், இளங்கோபன், காலஞ் தவபாலன், கணேசமூர்த்தி, நந்தா (பிரான்ஸ்), வேதந (கொலன்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.05.2005 வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வல்லை இந் னத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனை ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன் மேற்கு.*
*உடுப்பிட்டி,* (சி-4166)

தகவல்
குடும்பத்தி

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்